# அப்பலோ-12 வீரர்களுக்கு கொழும்பில் உற்சாகமான வரவேற்பு

Registered as a NewsPaper in Ceylon

விலை சதம் 15 ★ ★

ஈழநாடு சந்தா
தினப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒரு வருடம் ரூ. 66-00

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன்: 389

மலர் 12
இதழ்: 32
தேசிய தினசரி

ஈழநாடு சந்தா
வாரப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற் பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

யாழ்ப்பாணம் பங்குனி 1 முஹர்ரம் 5 சனிக்கிழமை [14-3-70]

## கையசைத்து மகிழ்ச்சியை தெரிவித்தனர்







கோட்டை, வெள்ளி மனித வரலாற்றில் மாபெரும் சாதனையை நிகழ்த்திய அமெரிக்க அப்பலோ-12 மாவீரர்கள் மூவரும் தமது துணைவியார்களுடன் இன்றுமாலை 3-30 மணியளவில் கட்டுநாயக்கா சர்வதேச விமானநிலையத்தில் அமெரிக்கஜனதிபதியின் விசேஷ விமானத்தில் வந்திறங்கினர்கள்.

விண்ணில் காலடிவைத்து சாகஸம் செய்த இருபதாம் நூற்றண்டின் புகழ்மிகு மனிதர்களை காண்பதற்கு விமான நிலையத்திலும் விமான நிலையத்தின்வெளியேயும் வெள்ளம்போல ஜனத்திரள் கரை புரண்டோடிக்கொண்டிருந்தது.

விண்வெளி வீரர்களையும், துணைவியர்களையும்ராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவும், அமெரிக்காவின் இலங்கைத்தூதர் திரு. அன்றூ வி. கொறியும் முதலில் வரவேற்றனர்.

அண்டவெளியில் சாகஸம் நிகழ்த்திய விண்வெளி வீரர்கள் பலமைல் தூரம் பறந்து வந்த விமானத்திலிருந்து இறங்கியதும் உற்சாகத்துடன் வாய் விட்டு, கையசைத்து தம்மை வரவேற்ற மக்கள் கூட்டத்துக்கு தமது கைகளை அசைத்து தமது அன்பைத் தெரிவித்துக் கொண்டனர். அவர்களின் துணைவியரும் அப்படியேகைகளை அசைத்து தங்கள் மகிழ்ச்சியையும், அன்பையும் தெரிவித்துக் கொண்டனர்.

விமானநிலையத்தில் கூடியிருந்த பிரமுகர்கள் அரசாங்க அதிகாரிகள் போன்றோருக்கு விண்வெளிவீரர்கள் அறிமுகம் செய்துவைக்கப்பட்டபின்னர், ஓய்வு எடுத்துக்கொள்வதற்காக கொழும்பு ஹோல்பேஸ் ஹோட்டலுக்கு ஊர்வலமாக காரில் அழைத்துச் செல்லப்பட்டனர்.

அவர்கள்சென்றவீதியெங்கும் இருமருங்குகளிலும் மக்கள்கூட்டம்; மகிழ்ச்சி ஆரவாரம் வானைப்பிளந்தது. விண்ணை வெற்றி கொண்ட வீரர்கள் மக்கள் அளித்த வரவேற்பைக் கண்டோ, என்னவோ மலர்ந்த முகங்களுடன் காணப்பட்டனர்.

இதன்பின்னர் ஹோட்டலில் நீண்ட நேரம் ஓய்வு எடுத்துக்கொண்டனர்.

கொழும்பு சுகததாசா ஸ்டேடியத்தில் நடந்த பொதுவரவேற்பு வைபவத்திலும் மூன்று விண்வெளி வீரர்களும் கலந்துகொண்டு உரையாற்றினர்கள். கவர்னர் ஜெனரலையும் சந்தித்தார்கள். இன்றுஇரவு அலரி மாளிகையில் பிரதமர் அளித்த இராப்போசன விருந்திலும் கலந்துகொண்டனர்.

நாளை காலை விண்வெளி வீரர்களும், மனைவியரும் விசேஷ புகையிரதத்தில் கண்டிசெல்கிறார்கள்.

### சிறுபான்மைத் தமிழருக்கு திறந்துவிடப்பட்ட

# பன்றித்தலைச்சி அம்மன் கோயிலை உடனே மூடும்படி கோர்ட் உத்தரவு

## நிர்வாகிகள் ஒருவரின் மனுமீது நடவடிக்கை

### 16-ம் திகதி நீதிமன்றத்தில் மூவரும் ஆஜராவர்

மட்டுவில், சனி மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவில் கதவுகள் மீண்டும் மூடப்படுமா என்ற கேள்விக்குறி எழுந்துள்ளது.

பன்றித்தலைச்சி அம்மன் கோயில் கதவுகள் சிறுபான்மைத் தமிழர்கள் சென்று வழிபடுவதற்காக அண்மையில் திறந்துவிடப்பட்டது சம்பந்தமாகச் சாவகச்சேரி மாஜிஸ்திரேட் முன்னிலையில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டதைத் தொடர்ந்து இக்கேள்வி ...

... மாஜிஸ்டிரேட் உத்தரவிட்டிருக்கிறார்.

பன்றித்தலைச்சி அம்மன் கோவில் மூன்று நிர்வாகிகளுள் ஒருவரான திரு. குழந்தைவேலு சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திரு. எம். தர்மலிங்கம் முன்னிலையில் சமர்ப்பித்துள்ள மனுவில், பன்றித்தலைச்சி அம்[மன்] கோவில் மூவருடைய நி[ர்]வாகத்திற்கு உட்பட்டதென்றும் முன்பு நடைபெற்ற வழக்கொன்றில், கோவிலில் ... சம்பிரதாய... வது அவசியமானல் கோவில் ...

... டுள்ளதாகவும், தற்போது நிர்வாகிகளுள் ஒருவரான திரு. வி. சிவகுரு ஏனைய இரு நிர்வாகிகளையும் கலந்துகொள்ளாமல் தன்னிஷ்டையானமுறையில் கோயில் கதவுகளைத் திறந்துவிட்டாரென்றும் தெரிவித்திருப்பதாகத் தெரிகின்றது.

ஆலய நிர்வாகிகளுள் ஒருவரான குழந்தைவே[லு]வின் மனுவைத் தொ[ட]ர்ந்து சாவகச்சேரி நீதிபதி பிஸ்கால் மூலம் மேற்படி உத்... [இ]ன்று பிறப்பித்தார்.

மனுதார் சார்பில் வழக் ...

## "ஈழநாடு" பாலைதீவு நிவாரணநிதி

இந்நிதிக்குப் பணம் அனுப்ப விரும்புபவர்கள் 'பாலைதீவு விபத்து நிவாரணநிதி', 'ஈழநாடு' யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க அன்புடன் வேண்டுகிறோம்.

### உதவி வழங்கியோர்:

| | | |
|---|---|---|
| நேற்றுவரை சேர்ந்த தொகை | ரூபா | 3,942-50 |
| சூ. யோமரியதாசன், நெசவு சமாசம் 10/1 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் | ரூ. | 5-00 |
| இலங்கை அரசாங்க பொறியலாளர் கூட்டுஸ்தாபனம் தெல்லிப்பளை, புதிய காங்கேசன்துறை ஆஸ்பத்திரி தெல்லிப்பளை உத்தியோகஸ்தர்களும் தொழிலாளர்களும். | ரூபா | 204-00 |
| க. பாக்கியநேசர், கண்டி வீதி கிளிநொச்சி | ரூபா | 15-00 |
| சு. மகாலிங்கம் அனலைதீவு தெற்கு | ரூபா | 25-00 |
| கே. அப்புத்துரை தொல்புரம் கிழக்கு சுழிபுரம். | ரூபா | 10-00 |
| தம்பு சுப்பிரமணியம் 141/1 கொழும்புத் துறை. யாழ்ப்பாணம் | ரூபா | 10-00 |
| க. தங்கராசா 241, பருத்தித்துறை வீதி, முத்திரைச்சந்தை நல்லூர். | ரூபா | 2-00 |

## எக்ஸ்போ-70 இன்று ஆரம்பம்

டோக்கியோ, மார்ச் 13 ஜப்பானியமன்னர்ஹிரோஹிட்டோ நாளைய தினம் எக்ஸ்போ-70 கண்காட்சியை திறந்து வைக்கின்றர். உலகநாடுகள் பலவும் பங்குபற்றும் இந்தக் கண்காட்சி ஜப்பானிய நகரான ஒஸாக்காவில் இடம் பெறுகின்றது, மன்னர் ஹிரோஹிட்டோ டோக்கியொவிலிருந்து இன்று ஒசாக்காவுக்கு புறப்பட்டார்,

## 'அந்துபோட்' இராசரத்தினம் இறுதி யாத்திரை

யாழ்ப்பாணம், சனி நாவலர் வழியில் சைவத்துக்கும் சைவ சமயக் கல்விக்கும் வித்தூட்டி வளர்த் ... நாவலர் சிலைகளாகும், நாவலர் தொடங்கிய பணியை நாட்டில் நிர்மானித்துத் தொடர்ந்து செயலாற்றிய ... ணணியில் நின்றவர் என்றார். மற்றும்வேறுபல பிரமுகர்களின் உரைகளுக்குப் பின்னர் இராஜரத்தினம் அவர் ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கே. அப்புத்துரை தொல்புரம் கிழக்கு
சுழிபுரம். ரூபா 10-00
தம்பு சுப்பிரமணியம் 141/1 கொழும்புத்
துறை. யாழ்ப்பாணம் ரூபா 10-00
க. தங்கராசா 241, பருத்தித்துறை வீதி,
முத்திரைச்சந்தை நல்லூர். ரூபா 2-00
யாழ்ப்பாணம் மில்வைற் ஸ்தாபன தொழிலாளர்களிடமும் சிப்பந்திகளிடம் இருந்து வழங்கப்பட்டதொகை. ரூபா 111-25
வி. கணபதிப்பிள்ளை, அரசாங்க கொன்ருக்ரர்,
அனுராதபுரம் காசோலை 100-00
கே. குமாரசாமி அம்மன் கோவிலடி, கரணவாய்
கரவெட்டி ரூபா 3-00
திருமதி ச. சிவ துரைராசா
உரும்பிராய் கிழக்கு காசோலை 5-00

விடப்பட்டது சம்பந்தமாகச் சாவகச்சேரி மாஜிஸ்திரேட் முன்னிலையில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டதைத் தொடர்ந்து இக்கேள்வி எழுந்துள்ளது.

இன்று தாக்கல்செய்யப்பட்ட மேற்படி மனுவின் காரணமாக அண்மையில் திறந்துவிடப்பட்ட ஆலயக் கதவுகளை உடனடியாக மூடிவிடும்படியும், இம்மாதம் 16ந் திகதி ஆலய நிர்வாகிகள் மூவரும் கோர்ட்டில் ஆஜராக வேண்டுமென்றும் நிர்வாகத்திற்கு உட்பட்டதென்றும் முன்பு நடைபெற்ற வழக்கொன்றில், கோவிலில் புதுமையான சம்பிரதாயங்களைப் புகுத்துவது அவசியமானல் கோவில் நிர்வாகிகள் மூவரும் ஒருமித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று குறிப்பிட் மனுவைத் தொடர்ந்து சாவகச்சேரி நீதிபதி பிஸ்கால் மூலம் மேற்படி உத்தரவை இன்று பிறப்பித்தார்.

மனுதார் சார்பில் வழக்கறிஞர் திரு. சி. சுந்தரலிங்கம் ஆஜரானார்.

வடபகுதி அசைஸ்விசாரணை

# 'பலாமரத்தின் பின்னல்நின்று எதிரிகளை கண்டுகொண்டேன்'

## சண்டிலிப்பாய் கொலை வழக்கு

யாழ்ப்பாணம், சனி

'எனது எல்லைவேலி எரிந்துகொண்டிருந்தபோது 4 பேர் துவக்குடன் முற்றத்திற்கு வந்தார்கள். நான் உள் அறையிலிருந்து வெளியில் வரும்போது கண்டேன் கிழக்குப் பக்கமாக நாங்கள் ஓடிவிட்டோம் கணவனும் பிள்ளைகளும் ஓடிவிட்டனர். வீடும் அடுப்படியும்எரிந்தது நான் ஒரு பலாமரத்துக்குப் பின்னல் நின்று பார்க்கும்போது 4 பேர் துவக்குடன் நின்றூர்கள். 2-ம் 4-ம், 6-ம் எதிரிகள் அங்கு நிற்பதைக்கண்டேன். வேலி எரிந்த வெளிச்சத்தில் அடையாளம் கண்டுகொண்டேன்'

சண்டிலிப்பாய் கொலை, தீ வைப்பு வழக்கில் சாட்சியமளித்த செல்லன் லட்சுமி மேற்கண்டவாறு கூறினர்.

இவ்வழக்கு வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் கலாநிதி சி. ஜி. வீரமந்திரி முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது

லட்சுமி சாட்சியமளிக்கையில் மேலும் கூறியதாவது:

4-ம் எதிரியின் பெயர் அந்நேரம் தெரியாது. ஒழுங்கையில் பல பேர் நின்றூர்கள். நான் அதைக் கவனிக்கவில்லை பொலிசார் மறுநாள் காலையில் வந்தனர். சம்பவம்நடந்த இடங்களைப் பார்த்துவிட்டுப் போனூர்கள். மறுநாள் பின்னேரம் வந்து என்னை விசாரணை செய்தார்கள். 3 எதிரிகளுடனும் எனக்குக்கோபமில்லை

இவ்வழக்கில் சண்டிலிப்பாயில் 68-ம் ஆண்டு ஜூன் மாதம் 4-ம் தேதி கந்தையா நாகராசா, சங்கரப்பிள்ளை திருவாதிரை. சரவணமுத்து அப்புராசா, முத்தையா தர்மலிங்கம், ஆறுமுகம் பொன்னுத்துரை, நல்லதம்பி துரைராஜா அல்லது துரையன் சுப்பிரமணியம் துரைராஜா ஆகியோர் மீது பொது நோக்கத்துடன் சட்ட விரோதமாக கூட்டம்கூடியதாகவும், தீவைத்ததாகவும் கணபதி வைத்தி என்பவரைக் கொலை செய்ததாகவும், மொத்தம் 13 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

1-ம், 2-ம், 3-ம், 5-ம், 6-ம், 7-ம் எதிரிகள் சார்பில் அட்வகேட் என். சத்தியேந்திரா, அட்வகேட் ராஜராஜேஸ்வரன் தங்கராசா, அட்வகேட் எஸ் சிவபாக்கியநாதன் ஆகியோரின் உதவியுடனும், புறக்டர் எம். சிற்றம்பலத்தின் அனுசரணையுடனும் ஆஜரானர். 4-ம் எதிரி சார்பில் அட்வகேட் வி. ஜெகசோதி, புறக்டர் எம். சிற்றம்பலத்தின் அனுசரணையுடன் ஆஜரானர் எதிரிகளுக்காக அரசாங்கத்தால் அட்வகேட் ஏ. முத்துக்கிருஷ்ணன் நியமிக்கப்பட்டிருந்தார் முடிக்குரிய தரப்பில் அட்வகேட் எல். டி. குருசாமி ஆஜரானர்.

எதிரிகள் சார்பில் ஆஜரான அட்வகேட் என். சத்தியேந்திரா சாட்சியமளித்த லட்சுமியை குறுக்கு விசாரணைசெய்தார்.

வழ: உமது வீடு எரிந்து முடியும்வரை பலாமரத்தின் கீழ் நின்றீரா?- ஆம்

வழ: 2 மணித்தியாலம் வரை நின்றீர்?- ஆம்

வழ: சில வேளை, நேரம் கூட இருக்கும்?- ஆம்

வழ: வீடு எரிந்து அணைந்துவிட்டது?- ஆம்

வழ: நெருப்பு அணைந்த பின் வீட்டிற்கு வந்தீர்?- இல்லை

வழ: வீட்டிற்குள் படுத்திருந்தீர்கள்?- ஆம்

வழ: வீட்டுக்குத் திண்ணை இருக்கிறது?- ஆம்

வழ: அறைக்குகதவுஇருக்கிறது?- ஆம்

வழ: அன்றிரவு வெடிச் சத்தத்திற்கு எழும்பினீர்?- ஆம்

வழ: உமது கணவனையும் பிள்ளைகளையும் எழுப்பினீர்? ஆம்

வழ: அந்த நேரம் அறைக்குள் இருந்தீர்?- ஆம்

வழ: மேலும் வெடிச் சத்தம் கேட்டது?- ஆம்

வழ: அதன் பின்பும் அறைக்குள் இருந்தீர்?- ஆம்

வழ, சம்பவத்தைக் காணவில்லை. கற்பனையில் சொல்லுகிறீர்? கண்டனுன்

வழ: எதிரிகளில் சிலரை தெரியும்?- ஆம்

வழ: மறுநாள் காலை பொலிசார் வந்தனர்?- ஆம்

வழ: பொலிசார்விசாரணை நடத்தினர்கள்?- காலையில் இடங்களைப் பார்வையிட்டனர்.

வழ: காலையில்பொலிசாரை கண்டீர்?- ஆம்

வழ: உமது விட்டடியில் ஒழுங்கையில் பொலிசாரை கண்டீர்?. ஆம்

வழ: வீடு எரிந்ததுபற்றி விசாரணை நடத்தினர்கள் என்று உமக்கு தெரியும்? ஆம்.

வழ: அன்றுநீதவான்விசாரணை செய்தது தெரியும்? அவர் எங்கள் இடத்திற்கு வரவில்லை.

வழ; நாகலிங்கம் வீட்டில் விசாரணை நடந்தது? நான் அந்தப்பக்கம் போகவில்லை.

வழ: மறுநாள் மாலை 5-15 மணிக்கு நீர் பொலிஸாருக்கு வாக்குமூலமளித்தீர்? ஆம்.

வழ: அன்றுமாலை வரை சம்பவம் பற்றி பலருடன் கதைத்தீர்?- நான் கதைக்கவில்லை.

வழ: அப்படி கதைப்பதில் பிழையிருக்கிறதா? நான் கதைக்கவில்லை.

வழ: வீட்டுலிருந்து குளறினீர்?. ஆம்.

வழ: பயத்தினல் உமது கணவனும் பிள்ளைகளும் ஒடிவிட்டனர்?- ஆம்

வழ: உமக்கும் பயமிருந்தது?- ஆம் என் வீடும் சாமான்களும் எரிவதைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

விசாரணை இம்மாதம் 16-ம் தேதிகாலைவரை ஒத்திபோடப்பட்டுள்ளது.

பாலைதீவு படகுவிபத்து

# கொடித்தினம் மூலம் நிவாரணம் வழங்குவர்

## யாழ்: மாநகரசபை முடிவு

யாழ்ப்பாணம், சனி

பாலைதீவுப் படகு விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக நேற்று நடைபெற்ற யாழ். மாநகரசபைக் கூட்டத்தில் சிறிது நேர மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

மாநகரசபை முதல்வர் திரு. ரி. எஸ் துரைராசா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் படகு விபத்தில் சிக்கி, மரணமானவர்களின் குடும்பங்களுக்கு கொடித்தினம் மூலம் பணம் வசூலித்து வழங்கவேண்டுமென்னும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

### இந்துபோர்ட் அதிபருக்கு அனுதாபம்

யாழ்ப்பாண இந்து பரிபாலன சபைத் தலைவர் திரு. சு. இராசரத்தினத்தின் மறைவு குறித்து நேற்று யாழ் மாநகரசபைக் கூட்டத்தில் அஞ்சலிசெலுத்தப்பட்டது.

திரு. இராசரத்தினம் குடும்பத்தினருக்கு ஓர் அனுதாபச் செய்தியை அனுப்புவதென்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

......

## சுகவீனத்துக்குப் பின் இன்று ஜி ஜி வருகிறூர்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணத் தொகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், கடந்த சில வாரங்களாக ஏற்பட்ட சுகவீனத்திற்குப் பின்னர் இன்று யாழ்ப்பாணம் வருகிறூர்.

கடந்த தை மாதம் சாவகச்சேரியில் நடைபெற்ற தமிழ்க் காங்கிரஸ் மகாநாட்டையடுத்துச் சுகவீனத்துக்குள்ளான திரு. பொன்னம்பலம், வைத்தியர்கள் பூரண ஓய்வெடுத்துக்கொள்ளவேண்டுமெனக் கேட்டுக்கொண்டமையாலேயே கடந்த இரு மாதங்களாக அவர் யாழ்ப்பாணம் வரமுடியாமலிருந்ததென அறியப்படுகின்றது.

... ..

## 26 குடும்பங்கள் வெளியேற்றம்

கோப்பாய், வெள்ளி

அச்சுவேலி செல்வநாயகபுரம் வீடமைப்புதிட்டத்தில் நிலவும் நீண்டநாளைய குடிநீர்ப்பிரச்னை, சந்தைப் பிரச்னை ஆகியவை இன்னும் தீர்க்கப்படவில்லை.

இதன் காரணமாக மேற்படி திட்டந்தில் 26 வீடுகளிலிருந்து குடும்பங்கள் வெளியேறியுள்ளன. மேற்படி பிரச்னைகள் குறித்து கோப்பாய் ஆட்சிமன்ற உறுப்பினருக்கு புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இறுதி யாத்திரை

யாழ்ப்பாணம், சனி

நாவலர் வழியில் சைவத்துக்கும் சைவ சமயக் கல்விக்கும் வித்தூட்டி வளர்த்தவர் திரு இராஜரத்தினம், ஞானப்பிரகாசர், சேர் பொன் இராமநாதன் நாவலர் ஆகிய முப் பெரியார்களினல் தொடங்கப்பட்ட சைவப்பணியை இன்றைய காலம் வரைஇந்துபரிபாலன சபைமூலம் கட்டிக் காத்து வந்த திரு இராஜரத்தினம் அவர்களின் இழப்பு சைவ மக்களுக்கேற்பட்ட பேரிழப்பாகும்,

இவ்வாறு சைவசமய அறநெறிக் காவலர் முதலியார் சி, முத்துத்தம்பி காலஞ்சென்ற இந்துபரிபாலன சபை நிர்வாகியான திரு இராஜரத்தினம் அவர்களின் மரணச் சடங்கின்போது தெரிவித்தார்.

மறைந்த திரு இராஜரத்தினம் அவர்களின் மரணச் சடங்கில் பல்லாயிரக் கணக்கான ஆசிரியர்கள் மாணவர் மாணவிகள், ஆசிரியைகள் சமய ஸ்தாபனப் பிரமுகர்கள் கல்லூரி அதிபர்கள் அரசாங்க உயர் அதிகாரிகளுடன் வடமாநில கல்வி அதிகாரி தணிகாசலம், நீதியரசர் வீரமந்திரி, யாழ்ப்பாண தற்காலிக மாஜிஸ்திரேட் திரு கனகரத்தினம் வட்டுகோட்டை ஆட்சிமன்ற உறுப்பினர் திரு அ. அமிர்தலிங்கம், கோப்பாய் ஆட்சிமன்ற உறுப்பினர் சி. கதிரைவேற்பிள்ளை உதவி அரசாங்கஅதிபர் திரு எஸ், முருகேசம்பிள்ளை முன்னள் யாழ் நகர முதல்வர் சி, நாகராஜா தற்போதய உதவிமேயர் ஏ, துரைராசசிங்கம்உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

திரு இராஜரத்தினம்அவர்களின் சடலத்தை தகனகிரிகைக்காகவெளியே எடுத்துச் செல்லப்பட்ட வேளையில் திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலய அனைதை விடுதிச்சாலை மாணவிகள் கண்ணீர் பெருக்கி கோவெனக் குழறி அழுத காட்சி மரணச்சடங்கில் கலந்துகொண்டவர்களின் நெஞ்சங்களையெல்லாம் கரைப்பதாக அமைந்தது

சிதையில் இராஜரத்தினம் அவர்களின் பூதவுடலை வைத்து தகனக்கிரிகைகள் நடைபெறுவதற்கு முன்னர் முன்னுள் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிஅதிபர்திருகே, எஸ் சுப்பிரமணியம் பேசும்போது திரு இராஜரத்தினம் நிறுவிய 282 சைவசமயக் கல்வித் தாபனங்களும் 282 நாவலர் சிலைகளாகும், நாவலர் தொடங்கிய பணியை நாட்டில் நிர்மானித்துத் தொடர்ந்து செயலாற்றிய பெருமையுடைய இராசரத்தினம் சமபந்தி சமசனம் ஆகிய முற்போக்கான காரியங்களை சாதிப்பதிலும் முன்னணியில் நின்றவர் என்றூர்.

மற்றும்வேறுபல பிரமுகர்களின் உரைகளுக்குப் பின்னர் இராஜரத்தினம் அவர்களின் மூத்த மைந்தன், திரு கதிரேசம்பிள்ளை சிதைக்குத் தீவைத்தார்.

# "புராணத்தை முற்றுக நம்பவேண்டியதில்லை"

சுழிபுரம், வெள்ளி

'புராணத்தில் கூறப்படும் கதைகள் எல்லாவற்றையும் நம்பவேண்டும் என்றில்லை. நல்லவற்றை ஏற்று, தேவை எற்றவற்றைநீக்கிவிடலாம்' என்றுசைவப்பெரியார்திரு. எம் வைரமுத்து சுழிபுரம் விக்டோரியா கல்லூரி மண்டபத்தில் நடந்த சமயவிழாவில் கலந்துகொண்டு பேசுகையில் சொன்னூர்.

அவர் மேலும் பேசுகையில், 'மாணவர்களின் கருத்தில் ஐயப்படும் விடயங்களை தெளிவுபடுத்தி விளங்கவைக்கவேண்டியது ஆசிரியர்களின்கடமை. அப்போது தான் சமயபக்தியை வளர்க்க முடியும்' என்று கூறினர்.

# படகு விபத்தில் 200 பேர்பலி!

டாக்கா, மார்ச். 13

கிழக்கு பாகிஸ்தானில் படகு விபத்தொன்றில் இரு நூறு பேர் வரை கொல்லப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது.

டாக்காவிலிருந்து மகாரிப்பூருக்கு சென்று கொண்டிருந்த மோட்டார் படகு கோரவிபத்துக்குள்ளானது.

இன்னெரு படகொன்றுடன் இருட்டில் மோதிக்கொண்டதால், குறிப்பிட்ட படகு கவிழ்ந்தது.

இருநூறு பேர்வரை இந்தப்படகில் பயணம் செய்துகொண்டிருந்தனர் சடலங்களைத் தேடும் முயற்சி தொடர்ந்து நடந்துகொண்டிருக்கிறது.

## இன்று திறப்புவிழா

யாழ்ப்பாணம், சனி

இன்று மாலை 4-30 மணிக்கு மீசாலைகிராமமுன்னேற்றச்சங்க மண்டபத்தில் யாழ். இளைஞர் கழகத்தினரால் ஆரம்பிக்கப்படும்புதிய பாலர்பாடசாலைக்கான திறப்பு விழா நடைபெறவிருக்கிறது. சாவகச்சேரிப் பட்டின சபைத் தலைவர் திரு. சு. கனகரத்தினம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் யாழ். இளைஞர்கழகத் தலைவர் திரு. ரி. ஜெ. மயந்திரனின்வரவேற்புரையுடன் உசன்மகாவித்தியாலய அதிபர் திரு. சிவப்பிரகாசம், மீசாலை பாலர்பாடசாலை ஆசிரியை செல்வி என். சதாசிவம் சுகாதாரப் பரிசோதகர் திரு. என். செல்லப்பா ஆசிரியர் திரு. கே. முருகேசு ஆகியோர் உரையாற்றுவர்.

## கிரிக்கெட் பிரியர்களுக்கு

யாழ். மத்திய கல்லூரிக்கும், சென் ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையில் நடைபெறவிருக்கும் கிரிக்கெட் போட்டியையொட்டிக் கிரிக்கெட் பிரியர்களுக்கு உற்சாகமளிக்கும் புதிர் போட்டியொன்றை 'ஈழநாடு' நடத்தவிருக்கின்றது. இப்போட்டி சம்பந்தமான நிபந்தனைகள், மற்றும் விபரங்கள் நாளைய 'ஈழநாடு' இதழில் வெளியாகுமென்பதை அறியத் தருகின்றோம்.


நல்லூரில் $5\frac{1}{2}$ பரப்பு
காணி விற்பனவு
இராசாவின் தோட்டம் நாவலர் தெரு சந்தி
விண்ணப்பம்
60, புங்கங்குளம் தெரு. கொழும்புத்துறை
1989


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

யாழ்ப்பாண நகரில் ஆறு பரப்புக்காணி முழுவதும் நாற்பத்தையாயிரம். பகிர்ந்தும் வாங்கலாம். கடனும் கிடைக்கும் வெஸ்ட்டன், தபால் பெட்டி 54, யாழ்ப்பாணம், 1918

நவாலி அரசடிச் சந்தியில் பிரதான வீதியில் 20 பரப்பு காணியுடன் சகல வசதியும் கொண்ட விசாலமான வீடு விற்பனைக்குண்டு. பஸ் போக்குவரத்து, மின்சார வசதியுமுண்டு விபரங்களுக்கு: எஸ். கனகசூரியம், P. W. D., கண்டி. 1919

### தேவை

பலசரக்கு வியாபாரத்தில் அனுபவமுள்ள, ஆங்கில அறிவுள்ள, தமிழில் கணக்கு வைக்கும் முறை தெரிந்த, தொடர்ந்து சேவையாற்றத் தக்க நேர்மையுள்ள ஒருவர் தேவை. பிணைப்பணம் கட்டக்கூடியவர் விரும்பத்தக்கது. நேரில் வரவும் மு. குமாரசாமி, 120, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 1861

வீடு

கைத்தொழில் ஸ்தாபனத்திற்கு யாழ். மாநகர எல்லைக்குள் சகல வசதிகளுடன் உள்ள விசாலமான வீடு குத்தகைக்கு அல்லது வாடகைக்குத் தேவை. விபரங்களுடன் எழுதவும். சி ஆர். எஸ். என்டபிறைசஸ், கொக்குவில். 1916

## தோட்டம் விற்பனைக்கு
### ஆனையிறவுப் பகுதி

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆனையிறவுப் பகுதியில் துப்புரவு செய்யப்பெற்று கம்பிவேலியடைத்த பயிரிடப் பெருத வளமான 42 ஏக்கர் நிலம்.

தென்னை மற்றும் காய்கறித் தோட்டச் செய்கைக்கும், குடியிருக்கவும் ஏற்றது. குடியிருக்கும் பகுதியையும் 'மல்லில்லை' ஆலயத்தையும் அடுத்துள்ளது 1/4 மைல் தூரத்திற்கு குளத்தை முகப்பாயும் சுற்றிலும் ரம்மியமான சாட்சியும் அமைந்த சுகாதாரத்திற்கு ஏற்ற இடம். பிரதான வீதியிலிருந்து 1/2 மைல் தூரத்திற்குத் கார் போட்ட வீதியுண்டு.

சொந்தக்காரர் வெளிநாடு போவதால் விற்பனைக்குண்டு. திரு. சேனுதிராஜா, 'சேர்வியர்', 8, சோமசுந்தரம் வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்திற்குத் தொடர்பு கொள்ளவும். 1990


## இலவச சமயதீட்சை

யாழ்ப்பாணம், சனி

கைதடி இந்துவாலிபர் சங்கத்தின் பத்தாவது ஆண்டு நிறைவுகூட்டம் அடுத்தமாதம் 14-ம் திகதி கைதடி மத்தி சேதுகாவலர் வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அன்று இலவச சமய தீட்சையும் வழங்கப்படவுள்ளது. சமயதீட்சைபெற விரும்புபவர்கள் அடுத்த மாதம் 10-ம் திகதிக்குமுன் மேற்படி சங்கத்துக்கு விண்ணப்பிக்கவேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது

## 'மாணவருக்கு உளவளர்ச்சியுடன் உடல்வளர்ச்சியும் தேவை'

— மாவட்டக் கல்வி அதிகாரி

உடுப்பிராய். வியாழன் 'ஒருவர் வாழ்க்கையில் வெற்றிபெற ஆற்றல்கள் பல வேண்டும். மாணவர்கள் பாடசாலைகளில்புத்தகங்களைப்படித்து உளவளர்ச்சி பெற்ருல் மட்டும்போதாது உடல் வளர்ச்சி இன்றியமையாதது. மாணவர்களது உடல் வளர்ச்சிக்கு விளையாட்டுப்போட்டியே பெரிதும் உதவுகின்றது. பல ஆற்றல்களை விருத்திசெய்யவும் தோல்வி வரினும்சந்தோஷமாக ஏற்கும் திறனைப்பெறவும் விளையாட்டுப்போட்டிகள் உதவுகின்றன.'

நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியில் நடைபெற்ற கோப்பாய் வட்டாரக் கனிஷ்ட பாடசாலைகளினதும் கனிஷ்ட பிரிவுகளினதும் விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய மாவட்டக் கல்வி அதிகாரி திரு. ஆர். திருநாவுக்கரசு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கோப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. வே. சண்முகநாதன் தலைமையில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிப் பரிசளிப்பு விழாவில் இணைச் செயலாளர் திரு. க. வை. தனேஸ்வரன் வரவேற்புரை நிகழ்த்தினுர்.

கல்வி அதிகாரி திரு. வே. சண்முகநாதன் தமது மாணவர்களுடன் ஆசிரியர்களும் சேர்ந்து உற்சாகம் காட்டியிருப்பது மிகவும் வரவேற்கக் கூடியதென்றும் 'கோப்பாய் வட்டாரத்திலுள்ள பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் குறித்த விளையாட்டுபோட்டிசம்பந்தமாக எடுத்த முயற்சிகளைப் பாராட்டுவதாகவும் தெரிவித்தார்

இணைச்செயலாளர் திரு. க மார்க்கண்டு நன்றி கூறியதையடுத்து மாவட்டக்கல்வி அதிகாரி திரு. ஆர். திருநாவுககரசு 'நடேசலிங்கம் வெற்றிக்கேடயத்தை' உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலைக்கு வழங்கினுர். உரும்பராய் சந்திரோதய வித்தியாசாலை வெற்றிக்கிண்ணங்கள் மூன்றையும், உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலை வெற்றிக்கிண்ணம் ஒன்றையும் பெற்றுக்கொண்டன

0 0 0

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

சனி 14—3—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற் சிந்தனை, 6-30 கிறிஸ்தவ நற் சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 8-00 செய்திச் சுருக்கம், 8-03 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமிய கீதம், 8-30 செய்திச்சுருக்கம்.


344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 திரை கானம், 1-00 அரங்கேற்றம் 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 செய்திச் சுருக்கம், 4-28 கல்வி ஒலி பரப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 ஓடி விளையாடுபாப்பா.

இரவு 6-15 இசைப்பயிற்சி 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம்7-03கிராம சஞ்சிகை, 7-15 வயலின், 7-45 திரைகானம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 நாடகம், 10-00 நேயர் கேட்டவை, 10-30 செய்திச்சுருக்கம்.




## கத்திரிக்கோலால் வயிற்றில் ...த்திரைராம்

அல்லைப்பிட்டி. வியா வேலணை கிழக்கைச் சேர்ந்த வீரகத்தி சின்னையா என்பவரை அதே இடத்தைச் சேர்ந்த க. கந்தையா ...

## இன்றைய பலன்

பங்குனி மாதம் 1-ம் திகதி [14-3-70]

சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை

**மேஷம்**- ஆடம்பரமான செலவுகளை இன்று தவிர்த்துக்கொள்ளவும் பூமிப் பிணக்கு இன்று பொல்லாங்கைத் தேடித்தரலாம். உணவு விடயத்தில் அதிக கவனம் செலுத்தவும். எதிலும் அடக்கம்வேண்டும்.

**ரிஷபம்**- எதிலும் தயக்கநிலை தென்படும். நண்பர்களும் குறை கூறுவார்கள். பொருளாதாரத்துறையில் மந்தநிலை தென்படுகின்றது. வாய்வுரோகங்களுக்கு இடமளியாது உணவு விடயத்தில் கவனம்செலுத்தவும்.

**மிதுனம்**- துண்டிக்கப்பட்ட தொடர்பு மீண்டும் துளிர்விடுவதற்கு இடமுண்டு. இனிமையான பேச்சின் மூலம் எல்லோரையும் கவர்ந்துகொள்வீர்கள். அவசர அழைப்பிதழ் உங்களுக்கு ஆச்சரியத்தைத் தரலாம்.

**கடகம்**- சிந்தனை அலைகளின் மத்தியில் சிரமப்படுவீர்கள் எதிலும் விரக்திமனப்பான்மை தென்படும். எதிர்பார்த்த முடிவுகளில் ஏமாற்றம் உருவாகலாம் குழந்தையின் உடல்நலம் பாதிக்கப்படலாம். பொருளும் செலவாகும்

**சிம்மம்**- வாழ்க்கை இன்று வசதி நிறைந்ததாக இருக்கும். அயலவர்கள் உங்களை அன்புடன் உபசரிப்பார்கள். அன்னைவழிமூலம் ஆதரவுபெருகக்கூடும். எழுத்தாளர்களுக்கு சிறப்பானதினம்.

**கன்னி**- செய்தொழிலால் சிறப்புக் கிடைக்கும். வழக்குவிவகாரங்களில் வெற்றியுண்டு. நீண்டநாள் பிரச்னை இன்று நல்ல முடிவுக்கு வரும். வெளியிடத்திலிருந்து மகிழ்ச்சியைத் தேடித்தரும் செய்தியும் இன்று கிடைக்கும்.

**துலாம்**- திகைக்கவைக்கும் சம்பவம் இன்று நடைபெறலாம். அரசினரின் ஆத்திரப்பார்வையும் உங்கள் பக்கம் திரும்பமுடியும். கோஷ்டிச்சண்டையில் மாட்டிக் கொள்ளாது இருக்கவும்.

**விருச்சிகம்**- பிரிந்தவர்கள் வாழ்க்கையில் மீண்டும் இணைவர். குடும்பப் பிரச்னைகளில் சுமூகமானநிலை தென்படும். சுற்றுடலிலும் வேண்டியதை சாதிக்கக்கூடிய செல்வாக்கு பெருகும். இன்று பொன்னுன நாள்.

**தனுசு**- நம்பிக்கைமோசடி நடக்கும். நண்பர்களும் காலை வாரிவிடுவர். தீர்க்கமான சிந்தனையே சிறப்பைத் தரும்.

**மகரம்**- பரம்பொருளின் அருளுக்கு இடமுண்டு. பரோபகாரச்சிந்தை தலைதூக்கும். பொதுப்பணிகளில் ஈடுபடுபவர்கள் பொதுமக்களின் ஆதரவைப் பெறுவர் அந்தஸ்திலும் முன்னேற்றமுண்டு.

**கும்பம்**- திட்டமிட்டபடியே வாழ்க்கை நடக்கும், புதிய உறவுமுறைகளுக்கும் இடமுண்டு, உத்தியோக ரீதியாக வெளிநாடு செல்லும் வாய்ப்பும் சிலருக்கு கிடைக்கலாம். பயனுள்ள தினம்.

**மீனம்**- பணநிலைமை ஸ்திரமாக இருக்கும். புதிய வழிகளில் பொருள்வருவதற்கும் இடமுண்டு. பெற்றோர்களின் அன்பு அவசியம் கிடைக்கும். சினிமாத் தொழிலில் ஈடுபடுபவர்கள் சிறப்படைவர்.

தாச்சிப்போட்டி

## செட்டிபுலம் வெற்றி

அல்லைப்பிட்டி, வெள்ளி விளையாட்டமைச்சின் ஆதரவுடன் தீவுப்பகுதி விளையாட்டுச் சங்கத்தினரால் திரு. எஸ் சிவகடாட்சத்தின் வெற்றிக்கேடயத்திற்காக நடாத்தப்பட்டுவரும் தாச்சிச் சுற்றுப்போட்டியில் வேலணை செட்டிபுலம் சனசமூக நிலைய விளையாட்டுக் கோஷ்டியினர் வெற்றிபெற்றனர். செட்டிபுலம் சனசமூக நிலைய விளையா...

## அங்குரார்ப் பணம்

யாழ்ப்பாணம், சனி

ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் யாழ்ப்பாணக் கிளையை நேற்று சுதந்திரக்கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட பிரதிநிதி திரு எம். துரைராசா அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

அடுத்த தேர்தலில் கோப்பாய் தொகுதியில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி அபேட்சகரோக திரு எம். துரைராஜா ரபாட்டியிடுவார் என இக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் யாழ்ப்பாணக் கிளை ...

## புலோலியில் இன்று முத்தமிழ் விழா

யாழ்ப்பாணம், சனி

பருத்தித்துறை புலோலி இளைஞர் நன்னெறிக்கழக மாநாடு-முத்தமிழ்விழா வட இந்து மகளிர் கல்லூரியில் இன்றுகாலை ஆரம்பமாகி நடைபெறும்.

வட்டார வித்தியாதரிசி திரு. விகந்தசாமிதலைமையில் நடைபெறும் இவ்விழாவை வடமாநிலக் கல்வி அதிபர் திரு. சி. தணிகாசலம் குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைப்பார்.

காலை நடைபெறும் கருத்தரங்கில் திருவாளர்கள் எம் குணரத்தினம். ஆ. தம்பித்துரை, திருமதிரேஸ் செல்வமலர் பாமர். க சச்சிதானந்தன். செல்வி லைலா முஹிதீன் ஆகியோர் கலந்து கொள்வர். "இளைஞர்கள் நன்னெறி" என்னும்பொருளில் கவிஞர் கந்தவனத்தின் தலைமையில் நடைபெறும் கவியரங்கில்கவிஞர்கள் கல்வயல் வே குமாரசாமி, மணிமொழியார், மன்னவன் கந்தப்பு, அரியாலையூர் ஐயாத்துரை, இ நாகராஜன், காரை செ சுந்தரம்பிள்ளை ஆகியோர் கலந்து கொள்வர்.

மாலை நிகழ்ச்சிக்கு திருமு வீரபாகு தலைமைதாங்குவார். யாழ் அரசாங்க அதிபர் எப் சி பீட்டர்ஸ் குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைப்பார். வட்டார வித்தியாதிகாரி திரு க நவரத்தினம் பரிசில் வழங்குவார்.

திரு க கந்தசாமி, செல்வி பரமேஸ்வரி சின்னத்துரை வித்துவான் பொன் கிருஷ்ணபிள்ளை, திரு சு குமாரசாமி, திரு க சிவானந்தன் மயிலை சிவ சண்முகதாசன் திரு க சொக்கலிங்கம், வித்துவான் சி ஆறுமுகம் ஆகியோர் முறையே சொற்பொழிவு விவாத அரங்குகளில் கலந்து சொள்வர்.

மல்யுத்தம், கலையரங்கம் நாடக அரங்கம் என்பனவற்றுடன் விழா நிறைவும்.


வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி: 6-30, 10-00
பிரிபோயா, போயா 2-30 மணி
எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
நடித்த
தாய்சொல்லைத் தட்டாதே
(புதிய கொப்பி)

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30 9-30
பிறிபோயா, போயா 2-30
சிவாஜி-சரோஜாதேவி
நடித்த
குலமகள் ராதை

வல்வெட்டித்துறை
றஞ்சனு தியேட்டர்
தினசரி 6-30, 9-30
எம். ஜி. ஆர். - ஜமுனு
நடித்த
தாய்மகளுக்கு கட்டிய தாலி

வெற்றிகாரமான 2வது வாரம்
MANOHARA
JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p.m
Poya, Prepoya 4 shows
HELGA
he most revealing Sex education Film ever released!
(Strictly for adults only)
கருவுற்பத்தி முதல் பிரசவம் வரையில் இதுவரை திரைக்கு அனுமதிக்கப் படாத பல சம்பவங்களை புதிய சாதனைக் கருவிமூலம் வெளிப்படுத்திக் காட்டும் பிரசவ சித்திரம்.
ஹெல்கா
(கட்டாயமாக வயது வந்தவர்களுக்கு மட்டும்)
பாஸ்கள்-சலுகைகள் ரத்து

REGAL JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p.m.
Poya, Pre-poya 4 Shows
Brad Harris
in
MASSACRE AT MARBLE CITY
(Color)

ராஜா யாழ்ப்பாணம்
தினசரி 4காட்சிகள்
சிவாஜி, ஜி. வரலட்சுமி
எம். என். நம்பியார்
மற்றும் பலர் நடித்த


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

பண வருவாயைப்

பாதுகாக்க,




# மெற்றசிஸ்டொக்ஸ்'ஆர்'




குத்தும், உறிஞ்சும் சகல பூச்சிகளையும் கொன்றொழிக்க வல்லது மெற்றசிஸ்டொக்ஸ். அது ஒரு தொகுதிப் பூச்சி கொல்லி. தெளித்ததும் அது பயிர்ச் சாற்றுடன் சேர்ந்து, காய்கறியைத் தாக்கும் அழுக்கணவன், ஒட்டுண்ணி, வெண் ஈ, பனிப்பூச்சி, பேன், தென்னையைத் தாக்கும் செவ்வண்டு, அனைத்தையும் அழிக்கும்.

மெற்றசிஸ்டொக்ஸ் — ஒரு பேயர் தயாரிப்பு. அது நம்பிக்கையான, விஷயமறிந்த விநியோகஸ்தரிடம் கிடைக்கும். இலவச அறிவுரைச் சேவைக்கு எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**பயிர்களைக் காத்துப் பண லாபம் பெறப் பாவியுங்கள் - பேயர் விவசாய ரசாயனப் பொருள்கள்.**

உற்பத்தியாளர்:
பேயர்,
ஜெர்மனி.

இலங்கையில் விநியோகிப்போர்:
ஹேக்கெம் லிமிட்டெட்,
400, டீன்ஸ் வீதி,
கொழும்பு 10.

R.9157


...குத்தினராம்

அல்லைப்பிட்டி. வியா

வேலணை கிழக்கைச் சேர்ந்த வீரகத்தி சின்னையா என்பவரை அதே இடத்தைச் சேர்ந்த க. கந்தையா என்பவர் கத்திரிக்கோலால் வயிற்றில் குத்திப்படுகாயப் படுத்தினராம். காயமடைந்த சின்னையா ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இது சம்பந்தமாக ஊர்காவற்றுறைப் பொலிஸ் அதிபர் திரு ஆ. இராசையா தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டியினர் சந்தேக நபரான கந்தையாவைக் கைது செய்து காவலில் வைத்துள்ளனர்.

0 0 0

## 'கீரிமலையினிலே'

யாழ்ப்பாணம், சனி

கவிஞர் வி. கந்தவனத்தின் 'கீரிமலையினிலே' என்னும் காவியம் நாளை யாழ். திறந்த வெளியரங்கில் திரு. செங்கைஆழியான் தலைமையில் வெளியிடப்படவிருக்கிறது. கவிஞர் காரை. செ. சுந்தரம்பிள்ளை, கவிஞர் செ. கதிரேசம்பிள்ளை, திரு ஏ. ரி. பொன்னுத்துரை ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்துவர். சங்கீதபூஷணம் அல்வின் தேவசகாயம், 'கீரிமலையினிலே'யில் உள்ள சில பாடல்களைப் பாடிக்காட்டுவார்.

6 0 0

...காக நடாத்தப்பட்டுவரும் தாச்சிச் சுற்றுப்போட்டியில் வேலணை செட்டிபுலம் சனசமூக நிலைய விளையாட்டுக் கோஷ்டியினர் வெற்றிபெற்றனர். செட்டிபுலம் சனசமூக நிலைய விளையாட்டுக் கோஷ்டியினரும் புங்குடுதீவு பாரதி சனசமூக நிலைய விளையாட்டுக் கோஷ்டியினரும் மோதிக்கொண்ட இப்போட்டியில் செட்டிபுலம் கோஷ்டியினர் 10 பழங்களையும் புங்குடுதீவுக் கோஷ்டியினர் 5 பழங்களையும் பெற்றனர். புளியங்கூடலில் நடைபெற்ற இப்போட்டிக்கு தீவுப்பகுதி விளையாட்டுப் போதனாசிரியர் திரு. பி பொன்னுச்சாமி மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

## கோணேசர் உற்சவம்

திருக்கோணமலை, வெள்ளி

திருக்கோணேஸ்வரத்தின் வருடாந்த உற்சவம் இம்மாதம் 22-ந் திகதி, பங்குனி உத்தரத்தன்று ஆரம்பமாகின்றது. கொடியேற்ற உற்சவத்தை மிகக்கோலாகலமாக நடத்த கோணேஸ்வர பரிபாலன சபைத் தலைவர் டாக்டர் சி. சித்திரவேல் ஆவனசெய்துவருகின்றார்.

இம்மாதம் 18 ந் திகதி கோணேஸ்வரத்தில் மகாசங்காபிஷேகம் நடைபெறும்.

...ரோக திரு எம். துரைராஜா ரபாட்டியிடுவார் என இக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் யாழ்ப்பாணக் கிளை உறுப்பினர்களாக கீழ்க்காணுவோர் தெரிவு செய்யப்பட்டார்கள். தலைவர் திரு எம் நடராசா, உபதலைவர்கள் டாக்டர் எம். மாசிலாமணி, திரு எஸ். மயில்வாகனம், மாவட்ட பிரதிநிதி திரு எம். துரைராசா, இணைக்காரியதரிசிகள் திரு. ஜி. வைத்திலிங்கம் திரு எம். பூதத்தம்பி தனதிகாரி திரு கே எஸ். கணேசன் உபதனதிகாரி திரு வி. நாகலிங்கம் 10 கமிட்டி உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

## சைக்கிள் யாருடையது?

யாழ்ப்பாணம், சனி

அல்வாய் மேற்கில் உள்ள ஈழநாடு ஏஜன்ட் கே. சுப்பிரமணியம் என்பவர் 10ம் திகதி இரவு 10 மணியளவில் சந்தைக்கு அருகாமையில் ஒரு ரலி சைக்கிளைக் கண்டு எடுத்து கிராம சேவகரின் அனுமதியுடன் வைத்திருப்பதாகவும் உரியவர் வந்து கிராமசேவகரின் உத்தரவுடன் அடையாளம் காட்டிப் பெற்றுக் கொள்ளலாமென்றும் அறிவிக்கின்றார்.


இன்று முதல்

**யாழ். ராணியில் குதூகல ஆரம்பம்**

ஈழத்தின் தலைசிறந்த தயாரிப்பு!

பெண்குலத்தின் பெருமையை விளக்கும் உன்னத காவியம்

★ ஸ்ரீ சங்கர் (இரு வேடங்கள்) ★ உதயகுமார் ★ எஸ். எஸ். சின்னையா

★ ஹெலன் குமாரி-மஞ்சுளா ★ ஏ. எஸ். ராஜா ★ எம். செபஸ்தியான்

நடித்த

கிதாலயம் பிலிம்ஸ் அளிக்கும்

# "மஞ்சள் குங்குமம்"

டைரக்ஷன்: எம். வி. பாலன்

சிவாஜி, ஜி. வரலட்சுமி
எம். என். நம்பியார்
மற்றும் பலர் நடித்த

# ஹரிச்சந்திரா

வின்ஸர் திரையில்

தினசரி 4 காட்சிகள்

ஜெமினி கணேசன்-ஏ.வி.எம்.ராஜன்
விஜயநிர்மலா-நாகேஷ்-எம்.ஆர்.ஆர்.வாசு
நடித்த

# பந்தயம்

பாடல்கள்: கண்ணதாசன்

இசை: கே வி மகாதேவன்

வெற்றிகரமான 2 வது மாதம்

கெப்பிட்டல் (கொழும்பு)

**வெலிங்டன்** யாழ்ப்பாணம்

தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி

1968-ம் ஆண்டின் சிறந்த படத்திற்குரிய
'ஜனாதிபதியின் பிராந்தியப் பரிசு பெற்ற
வெற்றிச்சித்திரம்





சிவாஜிகணேசன் பத்மினி

பாலையா

நாகேஷ்

நம்பியார்

ஏ.வி.எம். ராஜன்

மனோரமா

மற்றும்பலர் நடித்த



சிவாஜிகணேசன் அளிக்கும்

ஸ்ரீ விஜயலக்ஷ்மி பிக்சர்ஸ்

# தில்லானா மோகனாம்பாள்

A. P நாகராஜன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி

# கிழக்கு, மேற்கு ஜெர்மன் பிரதமர்கள் சந்திக்கிருர்கள்

பொன்,மார்ச்13

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சந்திப்பு நடைபெற விருக்கிறது. கிழக்குஜெர்மனிப் பிரதமரும், மேற்குஜெர்மனி பிரதமரும் சந்தித்துப் பேச விருக்கிருர்கள். அடுத்த வியாழக்கிழமை கிழக்கு ஜெரமனியில் இவர்கள் பேச்சுவார்த்தை நடாத்துவார்கள்.

### ஒருபிரச்னை தீர்ந்தது

இருநாடுகளுக்குமிடையிலான உறவுகள் குறித்து பேச்சுவார்த்தை நடாத்துவதற்கான பிரச்னை நேற்றுத் தீர்த்து வைக்கப்பட்டது, இருநாட்டுத் தலைவர்களும் சந்தித்துப் பேச ஏற்கனவே இணங்கியபோதிலும், எங்கு சந்தித்துப் பேசுவதென்பது ஒரு பிரச்னையாக இருந்து வந்தது.

### அறிவிப்பு

கிழக்கு ஜெர்மனி, மேற்கு ஜெர்மனி பிரதமர்கள் இருவரும் கிழக்கு ஜெர்மனியில் பேச்சுவார்த்தை நடாத்த இணக்கம் தெரிவித்துள்ளனர் என்று இந்தச் சந்திப்பு அடுத்த வியாழக்கிழமை நடைபெறவிருப்பதாகவும் பொன்னில் அறிவிக்கப்பட்டது.

### சோவியத் வரவேற்பு

இந்த இருநாடுகளின் முடிவையும் சோவியத் யூனியன், பிரிட்டன், பிரான்ஸ் ஆகியநாடுகள் வரவேற்றுள்ளன.

# காங்கிரஸ் பிளவை நீக்க முக்கிய தலைவர்கள் முயற்சி

புதுடில்லி, மார்ச். 13

இரண்டாகப் பிளவுபட்டிருக்கும் அகில இந்தியக் காங்கிரஸ் கட்சியை மீண்டும்ஒற்றுமைப்படுத்தி ஒன்றுசேர்க்க முயற்சிகள் நடந்து வருகின்றன.

காங்கிரஸ் கட்சி இரண்டாகப்பிளவுபட்டதும், பிரதமர் இந்திரா காந்தி, ஜெகஜீவன்ராம் ஆகியோர் தலைமையில் புதிய காங்கிரஸ் கட்சியும் காமராஜர், நிஜலிங்கப்பா ஆகியோர் தலைமையில் பழைய காங்கிரஸ் கட்சியும் தனித்தனியாக செயல்பட்டு வருவதுதெரிந்ததே.

இப்போது இந்தப் பிளவைச் சரிசெய்து சமாதானத்தை ஏற்படுத்தி ஒற்றுமைப் படுத்தும் முயற்சியில், காமராஜர், இந்திரா காங்கிரஸ் கட்சி பொருளாளர் டி. பி. மிஸ்ரா ஆகியோர் ஈடுபட்டுள்ளனர். இவர்களிருவரும் டில்லியில் சந்தித்துப் பேசினர்கள்.

காங்கிரஸ் கட்சி பிளவுபட்ட பின்னர் 2 கோஷ்டிகளைச் சேர்ந்த முக்கியதலைவர்கள் சந்தித்துப்பேசியது இதுவே முதல்தடவையாகும்.

எந்தத் திட்டத்தின் அடிப்படையில் இந்தப் பேச்சு நடந்தது என்பது போன்ற பலவிபரங்கள் அறிவிக்கப்படவில்லை.

### மேற்கு வங்காளத்தில்

# மார்க்ஸிய கம்யூனிஸ்டுகளால் புதிய அரசு அமைக்கமுடியுமாம்

புதுடில்லி, மார்ச் 13

மேற்கு வங்காளத்தில் புதியஅரசொன்றை அமைப்பதற்கு போதியளவு பலம் தம்மிடமிருப்பதாக மார்க் ஒன்றை அமைக்க முடியுமென்பதை மேற்கு வங்க கவர்னரிடம் மார்க்ஸிய கம்யூனிஸ்ட் தெரிவிக்கவுள்ளது

சாதிக் அளித்த ஆதரவை

### 35 பேர் விலக்கிக் கொண்டனர்

# "குழாய்மூலம் நீர் கிடைக்க உதவுக"

## காங்கேசன்துறை ப. ச. தலைவர் அமைச்சருக்குக் கோரிக்கை

மாவிட்டபுரம்,வெள்ளி

காங்கேசன்துறைப் பட்டினத்திற்கு குழாய் மூலம் தண்ணீர் விநியோகம் செய்வதற்கு ஆகவேண்டிய நடவடிக்கைகளை எடுக்கும்படி காங்கேசன்துறைப் பட்டின சபைத்தலைவர் திரு க ஜெயபாலசிங்கம் கௌரவ உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசாவைக் கேட்டுள்ளார்.

காங்கேசன்துறைப் பட்டினத்தில் வாழும் மக்கள் நல்லகுடிதண்ணீர் இல்லாமல் பெரிதும் கஷ்டப்படுகிருர்கள் என்றும், இக் கஷ்டத்தை நன்குணர்ந்து பட்டினசபை1953ம் ஆண்டிலேயே இவ்வேண்டுகோளை அமைச்சர்முன் சமர்ப்பித்ததென்றும், இன்றுவரை ஓர் அமைச்சராவது இந்த அத்தியாவசிய சேவையை உணராது, அதற்குச்செவிசாய்க்காமல் இருப்பது வருத்தத்திற்குரிய விஷயமென்றும் சபைத்தலைவர் அமைச்சருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.பட்டினசபைத்தலைவர் தனது கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

"இப்பட்டினத்திற்குக் குழாய் மூலம் தண்ணீர் விநியோகம் செய்வதற்கு ஸ்தல ஸ்தாபன கமிஷனரால் அதிகாரம் வழங்கப்பட்டு, 1956ம் ஆண்டிலேயே தொழில்நுட்ப அதிகாரிகள் இதற்கு வேண்டிய புள்ளிவிபரங்களைச் சேகரித்தனர். நல்ல தண்ணீர் பெறக்கூடிய இடத்தையும் தண்ணீர் தாங்கி கட்டுவதற்கு தகுந்த இடமும் தேர்ந்தெடுக்கப்பட்டது. ஆனல் எதுவும் நடைமுறைக்கு வராதது வேதனையை அளிக்கின்றது தங்கள் பதவிக்காலம் முடிவடைவதற்குமுன் இத்திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கு வேண்டிய ஒழுங்குகளை மேற்கொள்ளவும்".

இத்திட்டம் நடைமுறைக்கு வருமேயானல், நல்ல தண்ணீர்இல்லாமல் கஷ்டப்படும்,ஊறணி,மயிலிட்டிமக்கள் பெரிதும் பயனடைவர் என பட்டினசபைத்தலைவர் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

# "வடபகுதிக்கு மகாவலி கங்கை வருவது நிச்சயம்"

யாழ்ப்பாணம்,வெள்ளி

'மகாவலிகங்கையை வடக்கே திருப்பு[illegible] இப்பகுதிகளை அபிவிருத்தி செய்வதோடு, வாலிபர்க செய்து முடிப்[illegible]ன் என் பதை சந்திரமண்டல பய[illegible] நிரூபித்து விட்டது. ஆதலால் மகாவலிகங்கை வடபகுதிக்கு வருவது நிச்ச

# 'மக்களுக்கு வசதியாக அமைக்கவும்'

மீசாலை, வெள்ளி

"பொதுமக்களின் அத்தியாவசிய பாவனைப் பொருட்களான மிளகாய், மல்லி, பருப்பு போன்றவை தட்டுப்பாடான இந்நாளில் இவற்றைக் கட்டுப்பாட்டு விலைக்காவது விற்பனை செய்யும் விற்பனவு வசதித்திணைக்களத்தின் கடை சாவகச்சேரியின் ஓர் ஒதுக்குப்புறமான இடத்தில், பெரும்பாலான மக்களுக்கு இக்கடை இருப்பதே தெரியாத நிலையில் இருப்பது வருந்தத்தக்கது. இதனல் தனிப்பட்ட கடைக்காரர்களினதும், கறுப்புச்சந்தைக்காரர்களினதும் லாப வேட்டைக்குப் பொதுமக்கள் பலியாகிருர்கள். இந்நிலை நீங்க, சாவகச்சேரி நகரசபையும், விற்பனவசதித்திணைக்களமும், சாவகச்சேரி சந்தை எல்லைக்குள் விற்பனை வசதித்திணைக்களத்தின் நவீனவிஸ்தரித்தவிற்பனவு நிலையம்ஒன்றை நிறுவ கூட்டான நடவடிக்கையில் அதிவிரைவில் இறங்க வேண்டும்"

இவ்வாறு கோரும் மகஜர் ஒன்றை மோகனதாஸ் சனசமூகநிலையத்தினர் விற்பனவு வசதித்திணைக்கள உதவி ஆணையாளர் சாவகச்சேரி நகரசபைத் தலைவர் ஆகியோருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

......

# 'வேலைநிறுத்தமே சுபீட்சத்துக்கு தடை'

முத்துமாகலை, வெள்ளி

வேலைநிறுத்தங்கள் நாட்டில் ஏற்படாதிருந்திருந்தால் தற்போதுஅடைந்துள்ளதிலும் பார்க்கக் கூடுதலான முன்னேற்றத்தை இலங்கை பெற்றிருக்கும் இந்த வேலைநிறுத்தங்களுக்குக் காரணகர்த்தாக்கள் 'நாட்டைப் பிளவுபடுத்த வேண்டும். தமது அரசியல் நலனுக்காக முன்னேற்றத்தைத் தடைப்படுத்தவேண்டும் என்ற எண்ணம் கொண்ட சில அரசியல்வாதிகளேயாகும்.'

உதவிக்கைத்தொழில் அமைச்சர் திரு. ஷெல்டன் ஜயசிங்கா முத்துமாகலையில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில்மேற்கண்டவாறு குறிப்பிட்டார். நாட்டில் உள்ள அநேக இளம் பெண்களின் வேலையில்லாப் பிரச்சினையைப் போக்கவே அரசாங்கம் 920 மின்தறி நிலையங்களை நாடெங்கும்

# இடைத்தவழிபாட்டுரிமையை நிலை நிறுத்தவேண்டும்'

சாவகச்சேரி, வெள்ளி

ஒடுககப்பட்டுவந்த மக்களுக்கு மறுக்கப்பட்டு வந்த ஆலயக் கதவுகள் இன்று திறக்கப் பட்டிருக்கின்றன கடந்த வருடம் ஒடுக்கப்பட்ட மக்களின் ஆலய வழிபாட்டுரிமையை மறுத்தவர்கள் இன்று உணர்ந்து அவ்வாலயத்தை சகலருக்கும் சமத்துவமாகத் திறந்துவிட்டுள்ளனர் என மட்டுவில் பன்றிதத்லைச்சி அம்மன் ஆலயப்பிரவேசத்தை ஆதரித்து நடைபெற்ற தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கப் பகிரங்கக் கூட்டத்தில் திரு. வி. ஏ கந்தசாமி கூறினர். இயக்கத்தலைவர்திரு.எஸ்.ரி.என். நாகரத்தினம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது

அவர் மேலும் கூறியதாவது:-"அடக்கி ஒடுக்கப்பட்டமக்கள் தங்களுடைய உரிமைகளை நிலைநாட்டுவதற்காக நடத்திய வெகுஜனப் போராட்டம் இன்று நல்லதொரு பலனைத் தந்துள்ளது. இந்தப் பாதையில் முன்சென்று மென்மேலும் எமக்கு மறுக்கப்படும் உரிமைகளை வென்றெடுக்கவேண்டும். பன்றித்தலைச்சிஅம்மன் ஆலயத்தை சகலருக்கும் திறந்து விட்ட ஆலய நிர்வாகிகளை நாம் பாராட்டவேண்டும்.

பன்றித்தலைச்சியில் ஒடுக்கப்பட்ட மக்கள் பெற்ற வழிபாட்டுரிமையை நிலை நிறுத்திக் கொள்ள வேண்டுமென அவர் சொன்னர்.

திருவாளர்கள் கே.டானியல், கே.செந்திவேல் க. சுப்பையா, வெ. கதிர்காமு ஆகியோருட்பட வேறு பலரும் பேசினர்.

# மன்னரிலும் வவனியாவிலும் இளைஞர்சேவைத்திட்டம்

## இம்மாதம் அமைக்கப்படும்

முசலி, வெள்ளி

மன்னர் மாவட்டத்தில் முதல் முறையாக தேசிய இளைஞர் சேவைத்திட்டம் இம்மாதம் 21-ம் திகதி அங்குரார்ப்பணம் செய்யப்படவிருக்கின்றது. இந்த அங்குரார்ப்பண விழாவின்போது ராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன சமுகமளிப்பாரென எதிர்பார்க்கப்படுகின்றது.

முதல் முறையாக வங்காலைக் கிராமத்தின் குளம் திருத்தும் வேலையும் குளத்தின் அணைக்கட்டு உயர்த்தும் வேலையும் செயல்படவிருக்கின்றது. இலங்கை தேசிய சேவை இளைஞர் சபைத் தலைவர் இவ்வைபவத்தில் கலந்து கொள்வார்.

இத்தொடக்க வேலையில் ஏறக்குறைய நூறு இளைஞர்கள் பங்குபற்றுவார்களென எதிர்பார்க்கப்படுகின்றது. மன்னர் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. சங்கரப்பிள்ளை கதிர்காமநாதனும், முசலிக் காரியாதிகாரி திரு. வை. சொக்கலிங்கமும் சகல விஷயங்களையும் கவனித்து வருகின்றனர்.

0 0 0

முல்லைத்தீவு, வியா

தேசிய இளைஞர் சேவைத்திட்டம் வவனியா மாவட்டத்தில் இம்மாதம் 20-ம் திகதி முல்லைத்தீவுக் காரியாதிகாரி பிரிவைச் சேர்ந்த மாமூலை கிராமமுன்னேற்றச்சங்க மண்டபத்தில் தேசிய இளைஞர் சேவை தலைவர் திரு டி எம் பி பி தசநாயக்காவினல் தொடக்கி வைக்கப்படவிருக்கிறது. இதில் வவனியா ஆட்சிமன்ற உறுப்பினர் திருதா சிவசிதம்பரம்,வவனியா மாவட்ட அதிபர் திரு பி பி பெரேரா ஆகியோர் கலந்து கொள்வர்.

இதற்கான சகல ஒழுங்குகளையும் காரியாதிகாரி திரு சொ கணேசநாதன் செய்து வருகிருர்.

——

# வேலணையில் இசைவிழா ஏற்பாடு

வேலணை, வெள்ளி

இம்மாதம் 20, 21, 22-ம் திகதிகளில் வேலணை மத்திய மகாவித்தியாலயத்தில் இசைவிழா நடைபெறவுள்ளது மத்திய மகாவித்தியாலய அதிபரைப் போஷ

# ஒரு மோட்டார் படகின் அவதி

அனலைதீவு,வெள்ளி

லைசென்ஸ் இல்லாத தண்டேலுடன் மேலதிக பிரயாணிகளை ஏற்றிச் சென்றதாம் மோட்டார் படகு ஒன்று. எழுவைதீவுக் கிராம சேவக

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

புதுடில்லி, மார்ச் 13 மேற்கு வங்காளத்தில் புதியஅரசொன்றை அமைப்பதற்கு போதியளவு பலம் தம்மிடமிருப்பதாக மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சி அறிவித்திருக்கிறது.

280 அங்கத்தவர்களுள்ள மேற்கு வங்க சட்டசபையில் 183 உறுப்பினர்களின் ஆதரவு தமக்கு இருப்பதாக மார்க்ஸியகம்யூனிஸ்ட்கட்சி கூறுகிறது.

தம்மால் புதிய அரசு ஒன்றை அமைக்க முடியுமென்பதை மேற்கு வங்க கவர்னரிடம் மார்க்ஸிய கம்யூனிஸ்ட் தெரிவிக்கவுள்ளது

கூட்டணியைச் சேர்ந்த மூன்று கட்சிகள் மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சியின் இந்த முடிவைக் குறைகூறியுள்ளன. கூட்டணியைப் புதுப்பிப்பதற்குப்பதிலாக சிறுபான்மை மந்திரி சபையை அமைக்க முயல்வதாககுறை தெரிவித்துள்ளன.

## “காவேரி அணைகட்டினால் உதவிப்பணம் இடையாது”

### மைசூருக்கு மத்திய அரசுஎச்சரிக்கை

புதுடில்லி, மார்ச். 13

“எங்கள் கட்டளையைமீறி காவேரியில் அணைகட்டினால் உதவிப்பணம் எதுவும்கொடுக்கமாட்டோம்” என்று மைசூர் அரசாங்கத்துக்கு டில்லி மந்திரி திரு. கே. எல். ராவ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மத்திய அரசின் அனுமதி பெறுமல், காவேரி ஆற்றில் ஏமாவதி, கபினி முதலிய அணைகளை மைசூர் அரசு இப்பொழுது கட்டி வருவது தெரிந்ததே.

மைசூர் மாநிலத்தில் உற்பத்தியான தமிழ் நாட்டில் பாயும் காவேரி ஆற்றுத்தண்ணீரை பங்கிட்டுக் கொள்வது குறித்து தமிழகத்துக்கும், மைசூருக்கும் இடையில்தகராறுநிலவிவருகிறது.

மத்திய அரசின் அனுமதி பெறுமலும், தமிழக அரசின் அனுமதியைப் பொருட்படுத்தாமலும் காவேரிஆற்றின் குறுக்கே இந்த அணைகளை மைசூர்அரசுகட்டிவருகிறது

## கம்போடிய அரசைக் கவிழ்க்க புரட்சி சதி

### வாய்ப்பு ஏற்பட்டிருப்பதாக இளவரசர் சிகானுக் கூறுகிறர்

பாரிஸ், மார்ச். 13

கம்போடியாவில் புரட்சிச்சதி ஒன்று நடப்பதற்கான வாய்ப்புக்கள் ஏற்பட்டிருப்பதாக கம்போடியா இளவரசர் நொறடோம்சிகானுக் இங்கு தெரிவித்தார். பாரிஸில் இதனை அவர் வெளியிட்டார்.

தமது அரசைக்கவிழ்க்க தாமில்லாத சமயம் சதி நடைபெற ஒரு வாய்ப்பை சில சக்திகள் உருவாக்கிக் கொண்டிருப்பதாக இளவரசர் கூறினர்.

பாரிஸுக்கு வந்திருந்த அவர் நாட்டில் அபாயகரமான சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாகத் தெரிவித்து, தம் நாட்டுக்கு மீண்டும் திரும்பிக்கொண்டிருந்தார்.

வலது சாரி சக்தி இந்த சதி முயற்சியை மேற்கொள்ளத் திட்டமிடுவதாக அவர் தெரிவித்தார்,

கம்போடியா செல்லும் இளவரசர் மாஸ்கோ, பீகிங் வழியாகச் செல்லப் போவதாகவும், அங்கு உயர் தலைவர்களை சந்தித்து விட்டே செல்லப்போவதாகவும் சொன்னர்.

### பாதுகாப்பு அதிகரிப்பு

கம்போடியால்பாதுகாப்பு நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. இராணுவம் உஷார் நிலையிலுள்ளது.

### இன்று பேராதனையில் வில்லுப்பாட்டு

யாழ்ப்பாணம், சனி

பேராதனையில் பல்கலைக்கழக தமிழ் சங்கத்தின் கலைவிழாவில் இன்று கலைவாணர் வில்லிசைக்குழுவினர் வில்லிசைக்கிறர்கள். கலாவிநோதன்சின்னமணி கே என். கணபதிப்பிள்ளை வில்லிசைப்பார் “கண்ணகி” என்ற வில்லிசைப்பாட்டை நிகழ்த்துவார்கள்.

சாதிக் அளித்த ஆதரவை

## 35 பேர் விலக்கிக் கொண்டனர்

புதுடில்லி, மார்ச் 1[illegible]

ஜம்மு - காஷ்மீர் சட்டசபைக் காங்கிரஸ்கட்சியைச் சேர்ந்த 35 அங்கத்தவர்கள் முதலமைச்சர் சாதிக்கும் அளித்துவந்த ஆதரவை விலக்கிக்கொண்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது

விலகிக்கொண்ட அங்கத்தவர்களின் பிரதமகொரடா இந்தத் தகவலை 35 அங்கத்தவர்கள் சார்பிலும் தெரிவித்தார்.

ஜம்மு - காஷ்மீர் சட்டசபையில் 72 அங்கத்தவர்கள் உள்ளனர்.

தமது ஆதரவை விலக்கிக்கொண்டதனுல், இந்திரா மீதும், ஜெகஜீவன்ராம்மீதும் நம்பிக்கை இல்லைஎனக்குறிக்காது. என்றும், புதிய தலைவர் ஒருவரைத் தெரிவுசெய்யவேண்டும் என்றும் பிரதமகொரடா தெரிவித்துள்ளார்.

.........

## ஆசிரியர் வேலைநிறுத்தம் செய்யார்

திருவனந்தபுரம், மார்ச் 13

வரும் திங்கட்கிழமை வேலைநிறுத்தம் செய்யவிருந்த கேரள தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் உத்தேச வேலைநிறுத்தத்தைக் கைவிட்டனர்.

கேரள கல்வி மந்திரியின் கோரிக்கையை ஆசிரியர் ஏற்றுக் கொண்டனர்.

## அண்ணநினைவுப் பள்ளிக்கூடம்

காஞ்சிபுரம், மார்ச். 13

“செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் அண்ண நினைவுப் பள்ளிக்கூடம் கட்டப்படும் என்று செங்கல்பட்டு மாவட்ட கலெக்டர் சீதாராமதாஸ் கூறினர்.

.........

சங்கானை, வெள்ளி

‘கல்வி கல்விக்காகவல்ல வாழ்க்கைக்காகவே என்பதை நாம் மறந்துவிடக்கூடாது’ என திரு. மு. சிவானந்தம் கனகராயன்குளம் மகாவித்தியாலயத்தில் திரு. ஜே. பரராசசேகரத்துக்கு அளிக்கப்பட்ட பிரியாவிடை விருந்தின்போதுபேசுகையில் குறிப்பிட்டார் பண்டிதர் பொ. கணேசனும் பேசினர்.

யாழ்ப்பாணம், வெள்ளி

‘மகாவலிகங்கையை வடக்கே திருப்புவதன் மூலம், இப்பகுதிகளை அபிவிருத்தி செய்வதோடு, வாலிபர்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் தீர்க்கமுடியும்’.

மீசாலையில் நடந்த இலட்சிய மன்றத்தின் 2 வது ஆண்டுவிழாவில் முன்னாள் சாவகச்சேரி எம். பி. திரு. வி. குமாரசாமி பேசும்போது மேற்கண்டவாறு கூறினர்.

சாவகச்சேரி நகரசபை தலைவர் திரு. சு கனகரத்தினம் தலைமையில் நடந்த இவ்விழாவில், திரு. வி. குமாரசாமி மேலும்பேசியதாவது: மகாவலி கங்கையை வடக்கே திருப்பும் திட்டம் பல கோடி ரூபாவில் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. இத்திட்டம் பயனற்ற தென்றும், கங்கையை வடக்கே கொண்டு வர முடியாதென்றும் சிலர் கூறுகிறர்கள். மனிதன் நினைத்தால் எதையும் செய்து முடிப்[illegible]ன் என்பதை சந்திரமண்டல பயணம் நிரூபித்து விட்டது. ஆதலால் மகாவலிகங்கை வடபகுதிக்கு வருவது நிச்சயம்.

திரு ச ஆ [illegible]பாலமூர்த்தி பேசும்போது, மீசாலைக்கு தனியாக ஒரு கிராம சபை நிறுவினுல்தான் இப்பகுதியை முன்னேற்றலாம் என்று கூறினர்.

திருவாளர்கள் சி செல்லையா, ஆ மார்க்கண்டு உட்பட மற்றும் பலர் பேசினர்கள்.

## ஜெர்மன் உதவியுடன் கண்ணடி தொழிற்சாலை

கோட்டை, வெள்ளி

மேற்கு ஜேர்மன் வர்த்தக நிறுவனம் ஒன்றின் உதவியுடன் லட்சக்கணக்கான ரூபா செலவில் மாபெரும் கண்ணடித்தொழிற்சாலை ஒன்று நாத்தாண்டியாவில் நிறுவப்பட இருக்கிறது.

கைத்தொழில் மீன் பிடி அமைச்சர் திரு. பிலிப். குணவர்த்தன இத் தொழிற் சாலைககான அத்திவாரக் கல்லை இம்மாதம் 24-ந்திகதி நாட்டுவார்.

## ‘சமஷ்டியுடன் இரகசிய ஒப்பந்தங்கள்’

மித்தேனிய, வெள்ளி

‘ஐக்கிய தேசியக்கட்சி சமஷ்டிக்கட்சி அரசாங்கத்தில் இருந்து விலகிய பின்னரும் அதனோடு இரகசிய ஒப்பந்தங்கள்வைத்திருக்கிறது.’

முல்கிரிகலைத் தொகுதியில் நடைபெற்ற சுதந்திரக்கட்சிப் பிரசாரக்கூட்டத்தில் முல்கிரிகலை ஆட்சிமன்ற அங்கத்தவர் திரு. ஜோர்ஜ் இராசபக்ஸா மேற்கண்டவாறு கூறினர்.

அவர் மேலும்தொடர்ந்து பேசுகையில்கூறியதாவதுபிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா மாவட்டசபை மசோதா எடுக்கப்பட மாட்டாது என இதுவரைக் கூறவில்லை எனக்குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில் வணயட்டி தெரியே வஜிராபுதி தேரோ உட்படப்பலர்உரையாற்றினர்.

டில் உள்ள அநேக இளம் பெண்களின் வேலையில்லாப் பிரச்சினையைப் போக்கவே அரசாங்கம் 920 மின்தறி நிலையங்களை நாடெங்கும் நிறுவியுள்ளது என அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் தெரிவித்தார்.

## “மக்களே கவனிக்க வேண்டும்”

மாவிட்டபுரம், வெள்ளி

“கிராம மக்களின் மறுமலர்ச்சிக்காக சேவையாற்றும் சனசமூக நிலையங்களை மக்களே கட்டி வளர்க்க வேண்டும். இன்று எத்தனையோ சனசமூகநிலையங்கள் இருந்த இடமே தெரியாது மறைந்து விட்டன. எனவே இவற்றை புனரமைப்பு செய்யவேண்டும்”

இவ்வாறு வசாவிளான் ஞானவைரவர் சனசமூக நிலைய கட்டட நிதிக்காக நடைபெற்ற நாடக விழாவில் உரையாற்றிய மயிலிட்டி கிராமசபைத் தலைவர் திரு. கு. இ. இராசதுரை கூறினர்.

வசாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

சில சன சமூக நிலையங்கள் வெகுவாக முன்னேறி சிறந்த சேவையாற்றுகின்றன. வேறுசில வளர்ச்சி குன்றி அரசாங்க நன்கொடையை எதிர்பார்த்து நிற்கின்றன. இந்நிலைமாறி கிராமமக்களே தங்கள் கிராமங்களிலுள்ள சனசமூக நிலையங்களை வளர்க்கமுன் வரவேண்டும். அரசாங்க நன்கொடையை எதிர்பார்த்திருந்தால் முன்னேற முடியாது:

மற்றும்பலர் உரையாற்றினுர்கள்.

இவ்விழாவில் வசாவிளான் கலைவாணர் நாடக மன்றத்தினரின் 14-வது தயாரிப்பான “உலகம் சிரிக்கிறது” என்ற நாடகம் இடம்பெற்றது.

திகதிகளில் வேலணை மத்திய மகாவித்தியாலயத்தில் இசைவிழா நடைபெறவுள்ளது மத்திய மகாவித்தியாலய அதிபரைப் போஷகராகக்கொண்ட செயற்குழு இவ் இசைவிழாவை நடத்தும்பொருட்டு ஆரம்ப நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது.

அகில இலங்கை இசை ஆசிரியர் சங்கத்தினர் நடாத்தும் இவ் இசைவிழாவில் இலங்கையில் முன்னணி இசைவல்லுநர்கள் கலந்து கொள்கின்றனர்.

## சுகாதாரக் கல்வி

யாழ்ப்பாணம், சனி

மிருசுவில் படித்தவாலிபர் குடியேற்றத் திட்டத்தில் மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஜே. எம். சபாரத்தினம், சுகாதாரக் கல்விப் பயிற்சி வகுப்பை ஆரம்பித்து வைத்து வாலிபர்கள் சுகாதாரக் கல்வியைக் கற்பதன் அவசியத்தை வலியுறுத்தினுர். உதவிசுகாதார சேவை அத்தியட்சகர் டாக்டர் சற்குரு சுகாதாரக் கல்விப்போதனுசிரியர் திரு. கே பாலசுப்பிரமணியம் ஆகியோரும் உரைநிகழ்த்தினர். (மல். நி.

[illegible]வு, வெள்ளி

லைசென்ஸ் இல்லாத தண்டேலுடன் மேலதிக பிரயாணிகளை ஏற்றிச் சென்றதாம் மோட்டார் படகு ஒன்று. எழுவைதீவுக் கிராம சேவகரின் நடவடிக்கையைத்தொடர்ந்து விபத்துக்களெதுவுமின்றிப் பிரயாணிகள்காப்பாற்றப்பட்டதாகத் தெரிகிறது.

பிரஸ்தாப மோட்டார் படகு சுமார் 200 பிரயாணிகளை ஏற்றிக் கொண்டு எழுவைதீவுத் துறைமுகத்தை அடைய முடியாமல் பெரிதும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்ததாகவும் மீனவர் படகு மூலம் பிரயாணிகள் மீட்கப்பட்டதாவும் சுங்கப் பகுதியினர் துரத்தி வந்துஇப்படகை எச்சரித்ததாகவும் தெரியவந்தது.

## தமிழ்தந்தி படும்பாடு

கைதடி, வெள்ளி

வத்தளையில் உள்ள ஒரு வர்த்தகருக்கு யாழ்ப்பாணத்திலிருந்து அனுப்பப்பட்ட தமிழ்தந்தி உருமாறி, கிடைத்துள்ளது

உருளைக்கிழங்கு, நாட்டரிசி எஸ். எம். ஏ. கொள் முதல்செய்ய வேண்டாம் என்று அனுப்பப்பட்ட தந்தி ‘உங்கமுக்கு நாட்டருசி, எஸ். எம். ஈ. கொள்முதல் செய்யவேண்டாம்’ என உருமாறியிருந்தது.

## சாவகச்சேரியில் வரிமதிப்பு அதிகாரிகள்

மட்டுவில், வெள்ளி

நகரசபையுடன் புதிதாக இணைக்கப்பட்ட கிராம சபைக்குரிய புதிய இடங்கள் நேரில் பார்த்து வரி, மதிப்பிடுவதற்காக, புதிய வரி மதிப்பு அதிகாரிகள், இங்கு வந்திருக்கிறர்கள்.

சாவகச்சேரி நகர சபையுடன் புதிதாக இணைக்கப்பட்ட, மட்டுவில் கிராம சபைக்குரிய புதிய இடங்களை சாவகச்சேரி நகரசபையின் 4ம் 5ம் வட்டாரங்களுடன் இணைக்கப்பட்டுள்ளன. இந்தவட்டாரங்களுடன் புதிதாக இணைக்கப்பட்ட இடங்களை பார்வையிட்டு வரி மதிப்பீடு செய்வதற்காக, கொழும்பிலிருந்து வரிமதிப்பீடு அதிகாரி ஒருவர் இங்கு வந்துள்ளார்.

### தமிழக முதல்வர் கருணநிதி கூறுகிறர்:

# “இந்திமட்டும் ஆட்சிமொழியாக இருப்பதையே எதிர்க்கிறேம்”

சென்னை, மார்ச் 13

இந்தி மட்டும் பாரதத்தின் ஒரே ஆட்சி மொழியாக இருப்பதையே நாம் எதிர்க்கிறேம் என்று தமிழக முதலமைச்சர் திரு. கருணநிதி நேற்றுக் கூறினர்.

ராஜ்ய சட்டசபையில் அவர் பேசுகையில் அவர் இப்படியாகச் சொன்னர்.

தமிழ் உட்பட பதினன்கு மொழிகளும் பாரதத்தின் ஆட்சிமொழியாக இருக்க வேண்டுமென திரு. கருணநிதி தெரிவித்தார்.

### பிராமணர் அல்லாதவரும் அர்ச்சனை செய்ய

பிராமணர் அல்லாதோரும் கோயில்களில் அர்ச்சனை செய்வதற்கான சட்டம் விரைவில் கொண்டுவரப்படவிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கோயில்களில் அர்ச்சனை செய்துவரும் பிராமணர்களின் தொகை குறைந்து வருவதாகவும், வேறு தொழில்களுக்கு அவர்கள் செல்வதால் இத்தொகை குறைந்து வருவதாகவும், இதனை நிவர்த்தி செய்ய இச்சட்டம் உதவுமென்றும் முதலமைச்சர் சொன்னர்.

### நெடுஞ்செழியன்

கல்விஅமைச்சர்திரு. இரா. நெடுஞ்செழியன் பேசுகையில், இந்திக்கு நாம் எதிரிகளல்லரென்றும் ஆனல் தமிழ் உட்பட பதினன்கு மொழிகளும் இந்தியாவின் ஆட்சிமொழியாக இருக்க வேண்டுமென்றும் கூறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

பொதுஜன அபிப்பிராயம் உருவாகாதிருக்கையில் சட்டம் நிறைவேற்றுவது தலைவர்களுக்கு மக்கள் தொண்டில் ஈடுபாடு இல்லாததையே காட்டும்.

— மகாத்மாகாந்தி.

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegrams "EELANADU" Jaffna.
Post Box 49, Jaffna. Telephone: 389

யாழ்ப்பாணம் சௌமிய வருஷம் மாசிமாதம் 1-ந் திகதி (14-3-70)

## வெளிநாட்டுக் கடன்

மகாவலிகங்கை திசை திருப்பும் திட்ட மசோதா, எதிர்க்கட்சியினர் பலவிதங்களில் காட்டிய எதிர்ப்புடன் ஆட்சிமன்றத்தில் நிறைவேறிவிட்டது. மகாவலிகங்கை திசை திருப்பப்படுவதை எதிர்க்கட்சியினர் எதிர்க்கவில்லை. இத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு கடன் பெறுவதிலும் கடன் கொடுப்பவர்கள் விதித்துள்ள நிபந்தனைகளையும் அந்த நிபந்தனைகளுக்கு அரசாங்கம் ஒப்புக்கொண்டிருப்பதையுமே தாங்கள் எதிர்ப்பதாக எதிர்க்கட்சியினர் தெரிவித்துள்ளனர். இந்தக் கடன் மூலம் வெளிநாட்டுக்கு இலங்கையை அரசாங்கம் விற்றுவிட்டதாக அவர்கள் குற்றம் சாட்டுகின்றனர். அவர்களது குற்றச்சாட்டுக்களில் ஓரளவாவது நியாயமில்லையென்று சொல்லிவிட முடியாது.

எதிர்க்கட்சியினரின் இந்த சாட்டுகளுக்குப் பதிலளித்த பிரதமர் இலங்கையுட்பட 110 நாடுகள் அங்கம்வகிக்கும் பொதுஸ்தாபனமான உலகவங்கியிடமிருந்து கடன் வாங்காமல் வேறு எங்கு வாங்குவதென்றும் இதைவிடக் குறைந்த நிபந்தனைகளுடன் எதிர்க்கட்சியினரால் கடன் பெறமுடியுமாவென்றும் கேட்டிருக்கிறார். உலகவங்கியிலிருந்து முதலில் திருமதி பண்டாரநாயகாவின் அரசாங்கம் தான் கடன்பெற்றதென்றும் அப்பொழுதே [illegible] நாட்டின் சுயநிர்ணயவுரிமை அன்றே போயிருக்கவேண்டுமென்றும் பிரதமர் கூறியிருக்கிறார். பிரதமர் கூறியதிலும் தவறிருப்பதாகக் கொள்வதற்கில்லை.

கடன் வாங்காமல் நாட்டை அபிவிருத்திசெய்வது நல்லதுதான். வெளிநாடுகளிலிருந்து கடன் வாங்கினாலும் வல்லரசுகளின் செல்வாக்குநிறைந்த ஸ்தாபனங்களிடமிருந்து கடன் வாங்கினாலும் இலங்கை அந்த நாடுகளுக்[illegible]தென்றும் சொல்லமுடியாது. இந்தியாவும் பாகிஸ்தானும் கம்போடியாவும் ஏன் இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளும் கூட அமெரிக்காவின் விருப்பத்துக்கு மாறாக அமெரிக்காவின் நிபந்தனைகளுக்கு மாறாக நடந்திருக்கின்றன. சிக்கன நடவடிக்கை என்ற பெயரில் ஆசிய நாடுகளுக்கு உதவிசெய்வதை குறைத்துக் கொள்ளவும் [illegible] மூலம் அமெரிக்கா முன்வந்திருப்பதற்கு இதுதான் காரணமோ தெரியவில்லை.

என்றாலும் வெளிநாடுகளிலிருந்து கடன்பெறுவதும் வெளிநாடுகளின் ஆதரவிலுள்ள ஸ்தாபனங்களிலிருந்து கடன்பெறுவதும் எந்த நாட்டின் சுதந்திரத்துக்கும் நல்லதல்ல. ஆயினும் இன்றுள்ளநிலையில் அபிவிருத்தியடையாத நாடுகளும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளும் அபிவிருத்தியடைந்த நாடுகளிலிருந்து கடனும் உதவியும் பெறத்தான் வேண்டியுள்ளது. அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கும் அபிவிருத்தியடைந்த நாடுகளுக்குமுள்ள இடைவெளி நிரப்பப்படுவதற்கு வேறு வழிகள் காணப்படாதவரை இந்த கடனும் உதவியும் நீடிக்கத்தான்செய்யும்.

நமது நாட்டைப் பொறுத்தவரையில் மகாவலிகங்கையைத் திசை திருப்புவது போன்ற பெரிய திட்டத்தை வெளிஉதவியின்றி நிறைவேற்ற முடியுமென்று சொல்லமுடியாது. ஐக்கிய அரபுக்குடியரசில் அஸ்வான் அணைக்கட்டுத் திட்டமும் இந்தியாவில் பாக்ராநங்கல் அணைக்கட்டுத் திட்டமும் வெளியார் உதவியுடன்தான் செயல்பட்டன. இங்கும்கூட பத்து ஆண்டுகளுக்கு முன் மகாவலிகங்கை, களனிகங்கை பலநோக்கத் திட்டங்களை ஆரம்பிப்பதற்கு வெளிநாட்டு நிபுணர்களின் உதவி கோரப்பட்டது; வெளிநாட்டு உதவிபெறவும் திட்டமிடப்பட்டது.

திட்டங்கள் அவை எது

## இன்று கௌரவிக்கப்படும்

# திறந்தமனமும் தேவாரவாயும் அடக்கமுமுள்ள செந்தமிழ்மணி

யாழ். திறந்தவெளியரங்கில். யாழ்.இலக்கியவட்டம் கொண்டாடும் நான்காண்டு பூர்த்திவிழாவில் செந்தமிழ்மணி பொன். கிருஷ்ணபிள்ளை விருதுவழங்கிக் கௌரவிக்கப்படுகிறார்.

எந்த விடயத்தையும்-மனிதர்களையுந்தான்-சரியாக எடைபோட்டு, தகுந்த வார்த்தைகளினாலே சொல்லும் பண்டிதமணி சி-கணபதிப்பிள்ளையவர்கள் 'இந்தப் பண்டிதர் கற்கண்டுப்பண்டிதர்; உள்ளங்காலிலிருந்து உச்சிபரியந்தம் இனியவர்' என்று விதந்து எழுதியுள்ளார் ஒருவரைப்பற்றி அவர்தான் செந்தமிழ்மணி பொ. கிருஷ்ணபிள்ளை அவர்கள்.

தம்மைப் பற்றி வானளாவப் புழுகும் எழுத்தாளர்-படிப்பாளிகள்-கூட்டத்தையே காணும் எமக்குச் செந்தமிழ்மணி பொ.கி.ஒரு புறநடையாகத்தோன்றுகின்றார். தன்னைப்பற்றி, எளியேன், நாயேன் என்றெல்லாம் அவர் பேசும்போது அடக்கத்தின் உச்சநிலைக்கே போய்விடுகிறார். 'காக்க பொருளாய் அடக்கத்தை' என்ற அருமைத் திருக்குறளுக்கு உதாரண புருடர் இந்தச் செந்தமிழ்மணி. கம்பன் காவியக்கற்பனை காண்பதில் வம்பனுந்தமிழ் வான் முகிலாஞ்சிவம் - மகாலிங்கசிவம் வகித்த இடத்தை, கோப்பாய் அரசினர் ஆசிரிய பயிற்சிக்கழகத்தில்ஏற்று அதை மிகத்திறம்பட நடாத்திய பெருமை இச் செந்தமிழ்மணிக்கு உரியது-ஆம். இவர் பத்தொன்பது வருட காலமாகக் கோப்பாய், பலாலி ஆகிய அரசினர்ஆசிரியகலாசாலைகளில் பணிபுரிந்து பல்லாயிரக்கணக்கான ஆசிரிய மாணவர்களுக்கு தமிழார்வத்தையும் நல்லொழுக்கத்தையும் ஊட்டிய அரும்பெரும் ஆசானாவார்.

இளமைக் காலத்திலேயே வைத்திலிங்கபிள்ளை, சுப்பிரமணிய தேசிகர் என்ற அறிஞர்களிடம்முறையாக தமிழ் கற்ற 'பொ.கி.' அவர்கள் ஆங்கிலமும் ஓரளவு கற்ற பின்-அவருடைய ஆங்கிலப் படிப்புக்கு ஏற்ற உத்தியோகம் பார்க்கக்கூடிய வசதியிருந்தும் - தமிழாசிரியராகித் தமிழ்த்தொண்டு செய்வதையே பெற்றோரின் சொற்படி விரும்பினார். கோப்பாய் ஆசிரியகலாசாலையில் அவர் படித்துக்கொண்டிருந்தபோதே நல்ல அவரதுசொற்பொழிவு ஆற்றும் திறனைக் கண்டு தான் பிரமித்ததாக அவருடன் படித்துக்கொண்டிருந்த பண்டிதமணி 'சி.க' அவர்கள் ஒருமுறை கூறினார்கள். வெறும்படிப்புமாத்திரமன்று - சொற்பொழிவாற்றும் திறன் மாத்திரமன்று-அவரது ஒழுக்கம்-சமயவாழ்க்கைகூட ஆசிரியகலாசாலை வாழ்க்கையிலே பிரசித்தமானது.

இராமகிருஷ்ணர், விவேகானந்தர் முதலியோரிடத்தில் இளமைதொடங்கியே மிகப் பற்றுக்கொண்ட செந்தமிழ்மணி, சமய சமரசத்தையே எப்போதும் வற்புறுத்தினார். மகாத்மா காந்தியிடம்அவர் கொண்ட இறுக்கமான பற்றை இன்றும் கதராடை அன்றி வேறொன்றும் அணியாத அவரது செயலால்அறியலாம்.

சுமார் முப்பத்தைந்துவருடங்களுக்குமுன் ஆனந்த விகடன் பத்திரிகை விமர்சனப் போட்டிஒன்றை நடத்தியது. பங்கிம் சந்திரரது 'ஆனந்தமடம்' என்ற நாவலைப்பற்றி எழுதி அப்பரிசுகளில் ஒன்றைப் பெற்றுக்கொண்டார் 'பொ.கி.'. அப்பொழுதுதான்பொன். கிருஷ்ணனின் புகழ் ஈழத்து இரசிகர் வட்டாரத்தில் பரவத் தொடங்கியது. அவரது விமர்சன ஆற்றலை ஈழகேசரிப் பத்திரிகை நன்கு பயன்படுத்திக்கொண்டது. தமிழ்நாட்டில் அறிஞர்கள் மத்தியில் ஈழகேசரிப் பத்திரிகையின் புத்தக விமர்சனங்களுக்கு நல்ல மதிப்பு இருந்தது என்றால் அதற்குக்காரணமாயிருந்த பத்துப் பேர்களில் 'பொ.கி' முக்கியமானவர். அவர் அக்காலந் தொட்டு ஈழத்து இளம் எழுத்தாளர்களைத் தட்டிக்கொடுத்துஉற்சாகப்படுத்திய விதமே தனி.

1955ம் ஆண்டு என்று ஞாபகம். தமிழ்நாட்டிலும் ஈழத்திலும் வெளிவரும் பத்திரிகைகளில் வெளிவந்த கதை கட்டுரைகளில் சிறந்தவற்றிற்குப் பரிசளிப்பதாக அறிவித்துள்ளார்கள். அப்போட்டிக்கு செந்தமிழ்மணி பொ கி எழுதியஈழகேசரியில் வெளிந்த 'தொல்லை தரும் வள்ளுவர்' என்ற கட்டுரையும்அனுப்பட்டது. அந்த நகைச்சுவைக் கட்டுரை பரிசுபெற்று பண்டிதரின் புகழைஉயர்த்தியது. செந்தமிழ் மணியின் இலக்கிய கட்டுரைகளில் 18 கட்டுரைகள் 'இலக்கியசோலை' என்றநூல் வடிவில் வெளிவந்திருக்கிறன்னகம்பராமாயணம் தொடக்கம் சோமசுந்தரப்புலவர்பாடல் வரை அவர் எழுதியிருக்கும் கட்டுரைகளின் அழகேதனித்துவமானது. 'அறிவினால் ஆகுவது உண்டோ' என்ற குறளுக்கு அவர் எழுதியுள்ள கட்டுரையின் சிறப்பு சொல்லிலடங்காதது.

செந்தமிழ்மணியின் சமயக்கட்டுரைகள் பலபத்திரிகைப்பரவையுள் மூழ்கிக் கிடக்கின்றன. அவை நூல் வடிவம் பெறவேண்டியது அவசியம். வடமராட்சி பகுதியில் வியாபாரி மூலை என்ற இடத்தில் திறந்த மனமும் தேவாரவாயும் அடக்கமுமுள்ள இந்த மனிதர் புகழை விரும்பாத இவருக்குகவிஞர் அம்பியும் இன்னும் சிலபழைய மாணவர்களும் செய்த முயற்சியால் 13-2-65-ல் அவர் பலாலி அரசினர் ஆசிரிய பயிற்சிக் கழகத்தில் விழாவெடுத்து செந்தமிழ்மணியென பல பெரியோர் பட்டம்சூட்டிக் கௌரவித்தனர். 14-3-70ல் யாழ் இலக்கிய வட்டம் பெருமதிப்புக்குரிய இவருக்கு விருதுவழங்கிக் கௌரவிப்பதில் பெருமை அடைகிறது.

''கற்றோர் பலருண்டு
கற்றபடியே யொழுகும்
பொற்புடையாருள்
ஒருவர் பொன் கிருஷ்ணர்-நற்புலவீர்
கற்கண்டுப் பண்டிதனை

## யாழ் இலக்கிய வட்டத்தின் நான்கு ஆண்டுப்பணி

## ஐயாறன் எழுதுவது..

திருவருள் காட்டியது, எண்ணியபடியே மகாசிவராத்திரிக்குதிருக்கேதீச்சரம் சென்றேன். யாழ்ப்பாணத்திலிருந்து இ. போ. ச. விசேஷ பஸ்கள் யாத்திரிகர்களை ஏற்றிச் சென்றன. காலை 6 மணிக்கு முதல் பஸ் செல்வதாகத் தெரிவித்திருந்தனர். முதல் நாளே 50 சதம் கொடுத்து அதில் இடம் ரிசர்வ் செய்தேன். சிவராத்திரியன்று அதிகாலையிலே எழுந்து 5-30 மணிக்கே யாழ். பஸ்நிலையத்துக்கு வந்து சேர்ந்தேன்.

அங்கு ஏற்கெனவேஏராளமானவர்கள் லயன் வரிசையில் காத்துக் கிடந்தார்கள். இடம் ரிசர்வ் செய்தவர்கள் 'கியூவில்' நிற்கத் தேவையில்லை. அங்கு சற்று உட்காரவும் இடமில்லை. 'கியூ' வரிசையில் ஆண்களும் பெண்களும் நெருக்கி பஸ்ஸுக்காகத் தவம் கிடந்தார்கள். அங்கு வெளிச்சமும்இல்லை. 6 மணி தாண்டிவிட்டது. ஆனால் பஸ்ஸைக் காணவில்லை. காரியாலய அறையில் எட்டிப் பார்த்தேன். அங்கு இயேசு பெருமானின் படமும் பண்டாரநாயக்கா, டட்லி படங்களும் காட்சியளித்தன. ஒரு பக்கம் லட்சுமி படமிருந்தது. முருகன் படத்தையும் பஸ்ஸையும் காணோம். ஏன் முக்கால் மணி கழித்து பஸ்ஸும் ஒருவிதமாக வந்து சேர்ந்தது. காலும் வலி எடுத்தது. இந்த பஸ் ஸ்டாண்டிலே சில பெஞ்சுகளையாவது போடப் படாதா?

ஒவ்வொரு பஸ்ஸிலும் 20 இடங்களையே 'ரிசர்வ்' செய்கிறார்கள். அவர்கள் ஏறியதும் பஸ்ஸை லயன் வரிசை நிற்குமிடத்துக்குக் கொண்டு சென்றனர். பஸ்ஸிலே நிற்கவும் இடமில்லாதவரை பிரயாணிகளை ஏற்றினர். தூர இடங்களுக்குச் செல்லும் இவ்வித விசேஷ பஸ்ஸுகளில் பல பிரயாணிகளை நிற்க வைப்பது பெரிய இம்சை. தமிழகத்தில் அரசாங்கம் அல்லது தனிப்பட்டவர்கள் செலுத்தும் பஸ்ஸுகளிலே உட்கார இடமுள்ளவரையில்தான் பிரயாணிகளை ஏற்றுகின்றார்கள். அவ்வித முறையை விசேஷ பஸ்ஸுகளிலாவது கைக்கொள்ளக் கூடாதா? யார் இதற்குப் பொறுப்பு. பஸ்ஸிலே ஒரு குறிப்பிட்டவர்களுக்குத் தான் இடம் என்று எழுதியுள்ளனர். ஆனால் அதைவிட இரட்டிப்பானவர்களை எற்றுகிறார்களே, இதுசட்டவிரோதமல்லவா? தூர பிரயாணிகளை ஏன் இப்படி இம்சைக்குள்ளாக்க வேண்டும்? பஸ் பிரயாணத்தை எப்போதுதான் சுகமான

லாம் உண்டு. இப்போது மாடுகளை எல்லாம் கசாப்புக் கடைக்கு அனுப்பிவிடுகின்றனர். வண்டி இழுக்கவும், வயலில் உழவும் பஸ்ஸுகளும், டிராக்டர்களும் வந்துவிட்டதால் இனிஇங்கு மாடுகளுக்கு என்ன வேலை? வெளிநாடுகளிலிருந்து பால் மாவு வந்துவிடுகின்றன. எனில் மாடுகளைக் கொன்று சாப்பிடுவதைத் தவிர வேறு என்ன செய்வது? முன் காலத்திலே இரட்டை மாட்டு வண்டிகளைக் கட்டிக் கொண்டு திருவிழாவுக்கு ஊர் ஊராகக் குடும்பம் குடும்பமாகச் செல்லுவதே மிக உல்லாசமாக இருக்கும். பஸ்ஸிலும், ரயிலிலும் அந்த இன்பம் வர முடியுமா? புளிமூடை மாதிரி மூன்றல்லது நான்கு மடங்கு பிரயாணிகளை ஏற்றிவிடும் போது இதிலிருந்து எப்போது இறங்கி வெளியேறப் போகிறோமென்று நம் மனம் துடிக்கிறது. அவசியமாயின் 'ஸ்பெஷல்' வண்டி கட்டணத்தை அதிகரித்து பிரயாணத்தை இன்பமாக்கப்படாதா!

கண்டக்டர் 'அரோகரா' என்று சொன்னதும் எங்கள் விசேஷ பஸ் நிலையத்தை விட்டுப் புறப்பட்டது. பளையில் பஸ் நின்றதும் எல்லாரும் இறங்கி தேத்தண்ணீர் சாப்பிடலாமென்று அறிவித்தனர். பஸ்ஸில் இருந்தபடியே அந்தக் கடையைப் பார்த்தேன்: அசுத்தமும் கூட்டமும் அதிகமிருந்ததால் ஒன்றுமே வேண்டாமென்று மனம் கூறிவிட்டது. கால் மணிநேரம் கழித்து பஸ் புறப்பட்டதும் பின்னாலிருந்து ஓர் அன்பர் கையில் ஒரு சுருட்டைவைத்துக் கொண்டு 'புகைப்பதால் உங்களுக்குக் கஷ்டமா?' என்று கேட்டார். இப்படிக் கேட்பவரும் இக்காலத்தில் உள்ளதைக்காண வியப்பாகவும் மகிழ்ச்சியாகவுமிருந்தது. 'ஆமாம் கஷ்டம்தான்' என்று சொன்னதும்அவர் புகைக்காமல் இருந்துவிட்டார்: அவர் வாழ்க! அந்த நெருக்கத்தில் புகையும் சேர்ந்தால் பிரயாணம் எப்படி இருக்கும்! ஏர்கண்டிஷன் ரயில்வேக்களும், கார்களும்ஓடும் இக்காலத்தில், பஸ்ஸுகளுக்குள்ளே புகைக்கப்படாது என்று எப்போதுதான் கண்டிப்பாகத் தடைபோடப் போகிறார்களோ? நாட்டில்

யாரை வணங்கிவிட்டு, காலை சிற்றுண்டி சாப்பிட்டனர். அந்தக் கடைகளில் நுழைவதற்கே மனம்கூசுகிறது. எப்போதுதான் சுத்தமான சுகாதாரமான சூழ்நிலையிலே நல்லபடியாக இக்கடைகள் மாறப்போகின்றனவோ? வியாபாரத்துக் குறைவில்லை. ஏன் கடைகளை அபிவிருத்தி செய்யப்படாது? இதுவும் ஒருவிதத்தில் நல்லதுதான். அன்று சிவராத்திரி விரதத்தைநல்லபடி கைக்கொள்ள இதுஉதவியது! உபவாசத்துடன் கண்விழிக்க இந்த பஸ் பிரயாணம் உதவியதற்காக நன்றி செலுத்தினேன். அதுமட்டுமல்ல தனியே பிரயாணம் செய்ததால், வீண் பேச்சு எதுவுமில்லாமல், சிவசிந்தனையாகவே யாத்திரை செய்யமுடிந்தது. இடையிலே பல பல தடைகள் இருந்தும், டிரைவர் எவ்வித விக்கினமுமின்றி, வேகமாக திருக்கேதீஸ்வரத்துக்கு பகல் 1 மணிக்குப் பத்திரமாகக் கொண்டுசேர்த்துவிட்டார். அவர் அரைக்கணம் சற்றே அயர்ந்திருந்தால் எங்கள் பாடெல்லாம் என்ன ஆயிருக்கும்? கூண்டோடு கைலாசம் தானே!

பஸ்ஸில் போகவேண்டாமென்றும் அது பத்திரமல்லவென்றும் ஓரன்பர் எச்சரித்தார் தெய்வாதீனமாக சுமார் 150 மைல் பிரயாணமும் ஒரு விக்கினமுமின்றி முடிந்தது. இ. போ. ச.வுக்கு மிச்சம்தாங்ஸ்! பஸ்ஸில்ஏறுகையில் கண்டக்டரிடம்பலர் 5 ரூபாய் கொடுத்தனர். கட்டணம் நான்கு ரூபாய் 15 சதம்தான். டிக்கெட்டுக்குப்பின்புறம் 85 என்று கண்டக்டர் எழுதிக்கொடுத்தார். மறக்காமல்மிச்சத்தை வாங்கிக்கொள்ளவேண்டுமென்று வெகுநேரம் நினைத்திருந்தேன் ஆனால் திருக்கேதீச்சரம்வந்ததும் கீழேஇறங்கிவிடும் அவசரத்தில் பாக்கியெல்லாம் மறந்துவிட்டது. பாவம் கண்டக்டரும்மறந்துவிட்டார்போலும்! 'அரோகரா' சொன்ன அவருக்கு இறைவன் அருள்செய்துவிட்டார் போலும்!

(தொடரும்)

## இன்று

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலயத்தில் 11-ந் திருவிழாவாகிய இன்று மாலை 6—7-30 மணிவரை திரு வி. நல்லையா அவர்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டை அபிவிருத்திசெய்வது நல்லதுதான், வெளிநாடுகளிடமிருந்து கடன் வாங்கினாலும் வல்லரசுகளின் செல்வாக்குநிறைந்த ஸ்தாபனங்களிடமிருந்து கடன் வாங்கினாலும் இலங்கை அந்த நாடுகளுக்குக் கடமைப்படவும் அவைகளின் சொற்படி நடக்கவும் நேருமென்பது உண்மையே உலகவங்கியின் தலைவர் அமெரிக்காவின் முன்னாள் பாதுகாப்பு மந்திரியாக இருந்தவர். இந்த வங்கியில் 110 நாடுகள் அங்கம்வகித்தாலும் அமெரிக்காவின் செல்வாக்கு அதில் அதிகமிருக்கிறது. எந்த நாட்டுக்குக் கடன்கொடுப்பதானாலும் அமெரிக்காவின் சிபார்சு அவசியம். ஆனாலும் அமெரிக்காவிடமிருந்து தனிப்பட்ட முறையில் கடனும் உதவியும்பெற்ற நாடுகளும் அமெரிக்காவின் சிபார்சின் மீது உலகவங்கியிடமிருந்து கடன்பெற்ற நாடுகளும் அமெரிக்காவின் சொற்படி தாளம் போடுகின்றன என்று சொல்வதற்கில்லை. அமெரிக்கா என்ன நோக்கத்துடன் இவற்றை செய்திருந்தாலும் கூட அந்த நோக்கம் ஈடேறியுள்ள

மகாவலிகங்கை, களனி கங்கை பலநோக்கத் திட்டங்களை ஆரம்பிப்பதற்கு வெளிநாட்டு நிபுணர்களின் உதவி கோரப்பட்டது; வெளிநாட்டு உதவிபெறவும் திட்டமிடப்பட்டது.

திட்டங்கள் அவை எதுவானாலும் சரியானமுறையிலும் சிக்கனமாகவும் நிறைவேற்றப்பட்டு இத்திட்டங்கள் மூலம் நாடு பொருளாதார விருத்தியடைய முடியுமானால் வெளிநாடுகளிடமிருந்து கடன் பெறுவதால் தவறு எதுவும் ஏற்பட்டுவிடாது. திட்டங்கள் நல்ல வெற்றியீட்டினால் வாங்கிய கடனை உரியநேரத்தில் கொடுத்துவிட முடியாதா? என்றாலும் தேசிய ஒற்றுமையின் மூலம் நமது நாட்டிலுள்ள மூலவளங்களையும் நமது நாட்டில் உள்ள நிபுணர்களையும் மக்களையும் கொண்டே பயன்படுத்தி விவசாயம், கைத்தொழிலில் சிறுகச் சிறுக முன்னேற்றம்பெற்றால் கங்கையைத் திசை திருப்புவதுபோன்ற பெரிய திட்டங்களை வெளியார் உதவியின்றி நிறைவேற்றுவது கடினமல்ல.

## தனியரசு சாய்ந்தது

"மானேஜர் ராஜரத்னம் மற்றுலகம்சென்றுவிட்டார்
தானே தனியரசு சாய்ந்ததே - மானேகேள்
பன்னிரண்டு மூன்று பகமிரு்ழுப தாமாண்டு
மன்னும் மறைவுதினம் மற்று"

—பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

### தேவை

ஓர் மனேச்சரும், லிகிதரும். விண்ணப்ப முடிவு (21-3-70)விபரங்களை நேரில் பெற்றுக் கொள்ளலாம். தொல்புரம் ப. நோ. கூ. சங்கம் சுளிபுரம்.

### இன்று

யாழ் இலக்கிய வட்ட 4-வது ஆண்டு நிறைவுவிழா யாழ் திறந்தவெளியரங்கில் கவிஞர்கள் கந்தவனம் தலைமையில் இன்று மாலை நடைபெறும்

## மரண அறிவித்தல்

### முருககேசு இராசரத்தினம்

அச்சுவேலியைச் சேர்ந்த முருகேசு இராசரத்தினம் காலமானார். இவர் மாருதப்புரவீகவல்லியின் அன்புக்கணவரும், வைத்தியக் கல்லூரி மாணவன் தில்லைநடராசா தில்லைநாதன், திலகரத்தினம், இராசன் இராஜேஸ்வரி ஆகியோரின் அருமைத்தந்தையுமாவார். அன்னாரின் பூதவுடல் இன்று மாலை (14-3-70) பி.ப 4 மணியளவில் தகனக் கிரிகைகளுக்காக அச்சுவேலி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். உறவினரும் நண்பரும் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும்,
1493

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு மார்ச்மாதம் 14-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

படி விரும்பினுர். கோப்பாய் | சாகப்ப... திய விதமே தனி.

# யாழ். இலக்கிய வட்டத்தின் நான்கு ஆண்டுப்பணி

எமது நாடு; எமது எழுத்தாளர், எமது நூல்கள் என்ற கொள்கையை ஈழத்து வாசகர்கள் மத்தியில் முன்வைத்துக்கடந்த நான்கு ஆண்டுகளாக யாழ். இலக்கியவட்டம் ஆற்றியபணி, தக்க அளவுக்கு வெற்றியளித்துள்ளமை கண்டு நாம் பெருமைப்படுகின்றோம். எமதுவிடாமுயற்சியின் பயனாக, இன்று ஈழத்து வாசகர்கள் மத்தியில் ஈழத்து இலக்கிய வளர்ச்சி பற்றிய புத்துணர்ச்சியும், விழிப்புணர்ச்சியும் என்றுமில்லாதவாறு ஏற்பட்டுள்ளமையைக் கிராமங்கள் தோறும் நடந்துவரும் இலக்கிய நிகழ்ச்சிகள் எடுத்துக் காட்டுகின்றன.

ஈழத்து நூல்கள், பொது சன நூலகங்கள், கல்லூரி நூலகங்கள் ஆகியவற்றில் இடம் பெற்றிருப்பதுடன் வாசகர்களின் நல்லாதரவையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

கடந்த ஆண்டில் 12 சிறப்புக்கூட்டங்களையாம் நடாத்தியுள்ளோம், யாழ்வாணன் எழுதிய 'அமரத்துவம்' சிறுகதைத் தொகுதியினையும், திரு.ஏ. ரி.பொன்னுத்துரை எழுதிய நாடகம் என்ற ஓரங்க நாடக நூலையும் வெளியிட்டுள்ளோம். மேலும் சொக்கன் எழுதிய 'நல்லை நகர் தந்த நாவலர்', 'அறநெறிப்பா மஞ்சரி' ஆகிய நூல்களை அறிமுகப் படுத்தி ஆய்வுரையும் செய்திருக்கின்றோம்.

கடந்த ஆண்டுகளைப் போலவே இவ்வாண்டும் சங்கரீதியாக ஈழத்து இலக்கியத்திற்கு நாம் ஆற்றிய பணியுடன், நமது உறுப்பினர்கள் தனிப்பட்ட முறையிலும் பல சாதனைகளைச் செய்து யாழ். இலக்கியவட்ட வளர்ச்சியின் பெருமைக்கு ஊன்றுகோலாக இருந்துள்ளனர்,

'ஈழநாடு', அகில இலங்கை ரீதியில் நடாத்திய இலக்கியப் போட்டியில், கவிஞர் காரை. செ. சுந்தரம்பிள்ளை காவியத்திற்கான முதற்பரிசையும், செங்கை ஆழியான் செம்பியன் செல்வன் ஆகியோர் சிறுகதைக்கான முதற்பரிசையும், நாடகத்திற்கான முதற்பரிசை செம்பியன் செல்வனும், மூன்றாவது பரிசை மு. கனகராசனும், கவிதைக்கான முதற்பரிசைக் கவிஞர் வி. கந்தவனமும் பெற்றுள்ளனர்.

மேலு[ம்] அனைத்துலகக்கூட்டுறவாளர் தினத்தையொட்டி 'கூட்டுறவு' நடாத்திய கவிதைப் போட்டியில், முதற்பரிசை கவிஞர் வி. கந்தவனமும், மூன்றாவது பரிசைக் கவிஞர் வே. ஐயாத்துரையும் பெற்றனர். கொழும்பு உள்நாட்டு இறைவரித்திணைக்களம் நடாத்திய கவிதைப் போட்டியில் கவிஞர் வே. குமாரசாமி முதற்பரிசான தங்கப் பதக்கத்தைப்பெற்றுள்ளார் அத்துடன் அகில இலங்கைத் தேசிய காந்தி நூற்றாண்டு விழாக்குழுவினர் நடாத்திய கவிதைப்போட்டியில் கவிஞர் வே' ஐயாத்துரை முதற்பரிசைப்பெற்றுள்ளார். கடந்த ஆண்டிற்கான சாகித்திய மண்டலப் பரிசைக் கவிஞர் காரை. செ. சுந்தரம்பிள்ளை 'தேனூறு' என்ற கவிதைத் தொகுதிக்குப் பெற்றுள்ளார்.

இவ்விதம் 1969-ம்ஆண்டு யாழ். இலக்கியவட்டத்தைப் பொறுத்த வரையில் ஓர் இலக்கிய அறுவடை ஆண்டாக விளங்கியது

எமது நான்காவது ஆண்டு நிறைவிழா யாழ்ப்பாணம் திறந்தவெளியரங்கில் இன்று நடைபெறுகிறது. இவ்விழாவில் செந்தமிழ் மணி பொ. கிஷ்ணபிள்ளை அவர்கள் கௌரவிக்கப்படுகிறார்கள்.

கடந்த நான்கு ஆண்டு காலத்தில் பதினைந்து நூல்களை வெளியிட்ட நாம், இவ்விழாவில் கவிஞா வி. கந்தவனம் எழுதிய கீரிமலையினிலே என்ற காவிய நூலினை வெளியிடுகின்றோம்.

அடுத்த ஆண்டில் கவிஞர் காரை. செ. சுந்தரம்பிள்ளை எழுதிய தவம் (காவியம்) செங்கை ஆழியானின் 'கங்குமட்டை' சிறுகதை), வே. குமாரசாமியின் 'பாவாய்' (கவிதை) வே. ஐயாத்துரையின் 'வெள்ளைக் கமலம்' (கவிதை), கே. வி. நடராஜனின் கள்ளும் கதையும் (நாவல்) வி. கந்தவனத்தின் உய்யும் வழி(கவிதை) ஆகிய நூல்கள் வெளியிடப்படவுள்ளன.

எமது ஆக்க பூர்வமான முயற்சிகளுக்கு அவ்வப்போது ஆதரவு நல்கிவரும் ஆன்றோர்களுக்கும், பத்திரிகை ஆசிரியர்களுக்கும் நன்றி கூறக் கடப்பாடுடையோம்.

யாழ்வாணன்,
காரை. செ. சுந்தரம்பிள்ளை
இணைச்செயலாளர்.

கிறது.

"கற்றோர் பலருண்டு
கற்றபடியே யொழுகும்
பொற்புடையாருள்
ஒருவர் பொன் கிருஷ்
ணர்-நற்புலவீர்
கற்கண்டுப் பண்டிதனை[க்]
காலமெல்லாம் வாழ்[த்]
வெனச்
சிற்பரனையே துதிப்போம்
சேர்ந்து".

—புலவர்மணி
பெரியதம்பிப்பிள்ளை

எற்றுகிறார்களே, இதுசட்ட விரோதமல்லவா? தூர பிரயாணிகளை ஏன் இப்படி இம்சைக்குள்ளாக்க வேண்டும்? பஸ் பிரயாணத்தை எப்போதுதான் சுகமான தாக்கப் போகிறார்களோ?

ரயிலோ பஸ்ஸைவிட மோசம். கூட்டம் தாங்காது. முன் காலத்தில் இரட்டை மாட்டு வண்டிகள், குதிரை வண்டிகள் எல்

வேக்களும், கார்களும்ஓடும் இக்காலத்தில், பஸ்ஸுகளுக்குள்ளே புகைக்கப்படாது என்று எப்போதுதான் கண்டிப்பாகத் தடைபோடப் போகிறார்களோ? நாட்டில் வியாதிகள் பெருகுவதற்கு இதெல்லாம் தானே காரணம்!

முறிகண்டியிலே அடுத்தபடி பஸ் அரைமணி நின்றது. எல்லாரும் பிள்ளை

### இன்று

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலயத்தில் 11-ந் திருவிழாவாகிய இன்று மாலை 6—7-30 மணிவரை திரு வி. நல்லையா அவர்களின் பிரசங்கமும் சுவாமி பூதவாகனத்தில் வீதிவலம் வருவார். இரவு 830 930 வரை திரு கோவிந்தராஜா அவர்களின் இன்னிசைக் கச்சேரி நடைபெறும்.

## துயரம் நிறைந்த கச்சதீவு யாத்திரை 2

# உணவில்லை, நீரில்லை
# சோதனைக்கு மேல் சோதனை!

(நேற்றைய தொடர்ச்சி)

### தண்ணீர் தாகம்

தண்ணீர்த் தாகத்தினால் "சர்பத்" என்ற பெயரில் விற்ற ஒரு நீராகாரத்தை ஒரு கிளாஸ் ஒரு ரூபாய் வீதம் வேண்டிக்குடிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை எனக்கும், மற்றும் பலருக்கும் ஏற்பட்டது. மறுநாள் ஒன்பதாம்திகதி வெறிகொண்ட நாய் போல் சிவில் உடையில் நின்ற இளம் இராணுவவீரர் கடைகளைப் பிடுங்குங்கள், விடுதிகளை விட்டு வெளியேறுங்கள் என்று கத்தியபடி சிலருடைய கூடாரங்களைத் தகர்த்துக்கொண்டு சென்றார்.

யாழ்ப்பாணம் திரும்ப வள்ளங்கள் இல்லை. இந் நிலையில் அவர்களுடைய அட்டகாசம் எல்லைமீறிப் போய்க்கொண்டிருந்தது. நாலைந்து படகுகள் யாழ்ப்பாணத்தை நோக்கிப்புறப்பட்டன.

கரையில் யாத்திரிகர்களுடன் நின்ற வள்ளங்களை பிரயாணத்தை தொடங்கும்படி சிவில் உடையில் நின்ற பொலிசாரும், இராணுவத்தினரும் வற்புறுத்தினர்.

### கடல் கொந்தளித்தது

கடல் கொந்தளித்துக் கொண்டிருக்கிறது. காற்று சுழன்று சுழன்று வீசிக் கொண்டிருக்கிறது. இந்த நிலையில் எப்படிப் படகுகள் செல்லமுடியும்.

ஏகோபித்த குரலில் வள்ளச் சொந்தக்காரர்கள் வள்ளத்தைவிட மறுத்து விட்டனர். கடற்படையினரும் வள்ளச்சொந்தக்காரர்கள் பக்கம்நின்றனர்.

கடற்படை வீர ர்பலர் மழையில் நனைந்து ஏ
ஒருவர் "கடலைப்பற்றி எங் கப் பெருமூச்சு விட்டனர்.
களுக்குத்தான் தெரியும் நீங்கள் உங்கள் வேலையைப் பாருங்கள்" என்று இராணுவத்தினரை நோக்கிக்கூறினார்.

யாத்திரிகர்கள் மீண்டும் தங்கள் மூடை முடிச்சுகளை சுமந்தபடி நிழலைநாடினர்.

இப்படியொரு துர்ப்பாக்கியமான நிலை ஏற்படும் என்று யாராவது எண்ணியிருப்பார்களா? உணவுக்கு வழியில்லை. குடிப்பதற்கு நீரில்லை. இந்த நிலையில் இன்றைய பொழுதை எப்படிக் கழிப்பது? அங்கு சமையல் செய்துகொண்டிருந்த சிலரை அணுகி தாகத்துக்கு தண்ணீர் கேட்டபோது "அந்தக்கல்நெஞ்சக்காரர்" இல்லையென்று கைவிரித்தனர்.

இலைகளையும், குழைகளையும் தின்று முடியுமானால், உவர் நீரையும் குடித்து, இன்றைய பொழுதைப் போக்கடிப்போம் என்று என்னைப்போல் எத்தனை பேர் எண்ணியிருப்பார்களோ?

### தூக்கமில்லை

அன்று இரவு படுத்தால் தூக்கமே வரவில்லை. இதற்கிடையில் தூங்கும் நேரத்தில் மழை பெய்யத் தொடங்கியது. பிறந்த ஊரை அடைய வழியில்லை. உண்ணவும், குடிக்கவும் வழியில்லை. இவ்வளவு சோதனைக்கிடையிலும், மழையும் வந்தால் எப்படி இருக்கும்:

மூடை முடிச்சுகளை தூக்கிக்கொண்டும், குழந்தைகளை தூக்கிக் கொண்டு கோவிலை நாடினர் சிலர்.

### ஏன் இந்தச்சோதனை?

மனமார இறைவனைத் திட்டினேன். எதற்காக எங்களை சோதிக்கிறாய்என்று பலர் இறைவனை நோக்கி கையெடுத்தனர்.

காற்று கடுமையாக வீசத் தொடங்கியது. அலையும் தன்பாட்டுக்கு பனையளவு எழுந்து கரையில் மோதி மடிந்துகொண்டிருந்தது.

இன்னும் நாங்கள் பிரயாணத்தை மேற்கொள்ள முடியாத நிலையேற்படும் என்று எண்ணிக்கொண்டிருந்தபோது, மகாலக்ஷ்மி கச்சதீவின் பின்கரையிலிருந்து யாத்திரிகர்களை ஏற்றிக்கொண்டு கோயிலின் முன்பக்கத்தை வந்தடைந்தது. அப்போது கஜபாகு

**- வி. இன்னாசிமுத்து -**

கப்பலிலிருந்து உத்தியோகத்தர் ஒருவர் இயந்திர வள்ளத்தை விரைவாக செலுத்திக்கொண்டு, கரையைநோக்கி வந்து கொண்டிருந்தார்.

### கஜபாகு கப்பலில் இருந்து ஒரு அறிவிப்பு

கடந்து மூன்று வருடங்களாக நானும் கச்சதீவு யாத்திரை செய்து வருகிறேன் இம் முறை மாத்திரம் ஏன் இப்படியான கஷ்டம்ஏற்பட வேண்டும் என்று நான் எண்ணினேன்

புனிதமான அந்த இடத்தை வியாபார சந்தையாகவும் குடித்துவிட்டு கும்மாளம் போடும் இடமாகவும் இன்னும் வேறு பலதகாத செயல்களுக்கு உரிய இடமாகவும் பாவிப்பதாலேயே இறைவனுக்கு பொறுக்க முடியாமல் இவ்வளவு துன்பத்தை விடுகிறான் என எண்ணினேன்.

கஜபாகு கப்பலில் இருந்து வந்த அதிகாரி ஒலிபெருக்கி மூலம் அறிவித்தலொன்றையும் விடுத்தார். அது எமக்கு ஆறுதல் தரும் அறிவித்தலாகவே இருந்தது.

"எல்லா வள்ளங்களும் யாத்திரிகர்களை ஏற்றிக்கொண்டு, கஜபாகு கப்பலுக்கு செல்லவும் வள்ளங்களில் யாழ்ப்பாணத்துக்கு பிரயாணம் செய்யமுடியாது"

இதுதான் கஜபாகு கப்பலிலிருந்து வந்தவர்கள், ஒலிபெருக்கிமூலம் எமக்கு விடுத்த நற்செய்தி.

அலையும், காற்றும் எமக்கு எதிரிகளாக உள்ளனவே. எப்படித்தான் நாம் ஊருக்குச் செல்லப்போகிறோம். பெற்றவர்கள் எம்மைக் காணாது ஏங்கித் தவித்துக் கொண்டிருக்கப் போகிறார்களே, என எண்ணிக் கவலைப் பட்டுக்கொண்டிருந்த எமக்கு இச்செய்தி தேனாக இனித்தது. அளவிட முடியாத இன்பத்தில் மூழ்கினோம்.

"கஜபாகு" கப்பலுக்கு உங்களை அழைத்துக் கொண்டு போகும் நான் இடையில் திரும்பவும் சில நிமிடம் கச்சதீவினுள் உலவுவதற்கு அழைத்துச்செல்ல விரும்புகிறேன்.

நீர்கொழும்பிலிருந்து ஒரு குடும்பம் கச்சதீவு வந்திருந்தது. அதில் தாய் இரு புதல்விகள், மகன், மருமகள் ஆகியோர் இருந்தனர்.

(மிகுதி போயாமறுநாள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org